அருளோசை

திருவள்ளுவர்
ஆண்டு 2005
கார்த்திகை
1974 நவம்பர்



சிந்தாமணி நிதிஐந்தரு செழிக்கும் புவ னமும் ஓர்
நந்தாஎழில் உருவும்பெரு நலனும்கதி நலனும்
இந்தாஎனத் தருவார்தமை இரந்தார்களுக் கெல்லாம்
கந்தா ! சிவன்மைந்தா ! எனக் கனநீறணிந் திடிலே !

கணேசன்

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600 018

ஆண்டுச் சந்தா ரூ. 5]

[தொலைபேசி : 76828

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

பழனி ஞானதண்டாயுதபாணியைப் பணிந்திட வாரீர்!
அழகான திருமுருகன் அருள் பெறவே திரண்டு வாரீர்!
செந்தேனும் பாலும் மணக்கும் சேயோனை வழிபட வாரீர்!
சந்தன விபூதி மணக்கும் திருமேனி கண்டு மகிழ வாரீர்!

முடிக்காணிக்கை தரத் தனியிடம்!
தங்குவதற்கேற்ற வசதிகள்!
முதியவரும் முடியாதோரும் முருகன் அருகே செல்ல
இழுவை ரயில் வசதி!
பொங்கியெழும் பேரழகனைத் தாங்கிவரும் தங்கரதம்
காண வசதிகள்!

அத்தனையும் செய்து அழைக்கிறது பழனித் திருக்கோயில். தமிழ்க்கடவுளாம் கந்தப்பெருமானின் அருள் பெற்று, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கண்காணிப்பில் கீழே கண்ட நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

1. அருள்மிகு பழனியாண்டவர் கலைக்கல்லூரி
2. அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி
3. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
4. அருள்மிகு பழனியாண்டவர் செந்தமிழ்க் கல்லூரி
5. கார்த்திக்பள்ளி (ஆங்கிலப்போதனை)
6. செவிடர்பள்ளி
7. நாதசுரக் கல்லூரி
8. வேத ஆகமப்பாடசாலை
9. அன்புஇல்லம் (அநாதை விடுதி)
10. முதியோர் இல்லம்
11. குழந்தைகள் காப்பகம்
12. மருத்துவமனை

பழனித்திருமலையில் நாளும் பெருகிவரும் பக்தர்கட்குப் போதிய வசதிகள் செய்து தருவதற்காக 60 லட்சரூபாய் செலவில் மாபெரும் திருப்பணித் திட்டம் செயல்பட உள்ளது.

அறங்காவலர் குழு:

திரு. பு. மனோகரன், தலைவர், அறங்காவலர் குழு

அறங்காவலர்கள்

திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி, பி.எஸ்ஸி.,
திரு. என். நாச்சிமுத்து, எம்.எல்.ஏ.
திரு. புலவர் சி. பழனிச்சாமி, எம்.எல்.ஏ.
திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர்

வி. சௌ. கோதண்டபாணி, பி.எஸ்ஸி., பி.எல்.,
துணை ஆணையர்-நிர்வாக அதிகாரி

அருளோசை

சமய பாட போதனைத் திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 3	ஆனந்த கார்த்திகை 1974 நவம்பர்	ஓசை 5

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

அன்பர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். விளக்கு மனித வாழ்வில் ஒரு தனிச்சிறப்பைப் பெற்றிருக்கிறது. இருளில் இருக்கின்ற பொருள் கண்ணுக்குத் தெரிவதில்லை. விளக்கின் ஒளி இருளையகற்றிப் பொருளை நம் கண்களுக்குப் புலப்படுத்துகின்றது. மாயையை இருள் என்கிறோம். அதன் பிடியில் சிக்குண்ட நாம் இவ்வுலக பந்தத்தில் கட்டுண்டு உண்மைப் பொருளை அறியமாட்டாமல் தவிக்கின்றோம். எனவே மாயை இருளை அகற்ற ஓர் ஒளிவிளக்குத் தேவை. அதற்கு அன்பே அகல்; ஆழ்ந்த பக்தியே நெய்; உயிரே திரி; இப்படியான ஓர் ஒளிவிளக்கை ஏற்றி வைத்தால் நம்மைப் பற்றியிருக்கும் மாயையாகிய இருளின் நீங்கி, உள்ளம் ஒளி பெற்று, உண்மைப் பொருளாகிய இறைவன் பிரகாசமாவான். அதற்காகத்தான் வீடுமுழுவதும் விளக்கேற்றி வைத்து வணங்குகிறோம். தமிழகத்திலே திருக்கார்த்திகை விளக்கு வரிசை (-தீபாவளி)யாயிருந்து மாறிய தீபாவளித் திருநாள் இந்தியா முழுவதும் கொண்டாடப் பெறுகிறது. இன்றும் தமிழ்நாட்டில் கார்த்திகைத் தீபத் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. இக்கால நாகரிக உலகில் பலவகை விளக்குக்கள் இருந்தாலும், இத்திரு நாளில் அகலில் நெய்யூற்றித் திரியிட்டு விளக்கேற்றி வைத்து வணங்குதல், அன்பெனும் அகலில் ஆழ்ந்த பக்தி என்னும் நெய்யூற்றி உயிர்த் திரியேற்றி உள்ளத்தை ஒளிர வைத்தால் மாயை இருளகன்று உண்மைப்பொருள் விளக்கம் உண்டாகும் என்பதை உணர்த்தத்தான். அதனால் அன்பர்களே தொன்மையான கார்த்திகைத் தீபத் திருநாளையும் சிறப்பாகக் கொண்டாடுவீர்கள் என நம்புகிறோம்.

கந்தர் சஷ்டியை ஒட்டி இவ்விதழில் வள்ளி தெய்வயானை என்ற சிறப்புக் கட்டுரை வெளியிடப் பெறுகிறது.

வரும் மார்கழித் திங்களில் திருவெம்பாவை, திருப்பாவைப் பாராயணம் செய்ய விரும்பும் அன்பர்கள் 25 காசு தபால்தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகத் தேவைப்படும் பேரவையின் கிளைச்சங்கங்கள், பேரவையுடன் இணைந்த இந்து தனியார் பள்ளிகள் ஆகியவை தேவைப்படும் பிரதிகளைப் பேரவைச் செயலாளருக்கு முன்னதாக விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

கட்டுரைகளில் வரும் கருத்துக்களுக்கு, கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பு.

"அருளோசை"

வினா விடைப் பகுதி-அக்டோபர்-74

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு : திரு. செ. செண்பகலிங்கம், மறவன் குடியிருப்பு, கன்னியாகுமரி மாவட்டம், சந்தா எண். 450.

இரண்டாம் பரிசு: திரு. பொ. இரா. கண்ணன், லால்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், சந்தா எண். 2200.

மூன்றாம் பரிசு : திரு. கா. பா. பாஸ்கர், புரசைவாக்கம், சென்னை–84 சந்தா எண். 3217.

நான்காம் பரிசு : செல்வி. ச. திலோத்தமா, வாழப்பாடி, சேலம் மாவட்டம்.

உ
சிவமயம்

வள்ளலார் பாடியன அல்ல இவை

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருவருட்பாவுள் இருக்கத்தகாதன சிலவுள. சிவநிந்தையாகவும் சிலவுள. அவை இடைச் செருகலாயிருக்கும். அவற்றைக் குறித்து அறிஞர் பலர் கூடி ஆராய்ந்து ஒருமுடிபு கொண்டு செய்வன செய்தல் சீரியதாகும். கல்லாதார், வள்ளலார் திருவடிப்பற்றுல் தமக்குத் தோன்றியவாறு கூறுவனவும் எழுதுவனவும் பொருளாக் கொள்ளல் ஆகாது.

"கல்லாதான் ஒட்பம் கழியநன் ருயினும்
கொள்ளார் அறிவுடை யார்" என்றது'திருக்குறள்.

நாலாயிர திவ்விய பிரபந்தத்துள் இருக்கும் சிற்சில சொற்களைப் பற்றிய எழுத்துப்போர் பலயாண்டின் முன் நடந்தது. 'மெய்ப்பொருள் வாழ்ச்சி' என்னும் பெயரிய மறுப்புச் சுவடி (அச்சிடப்பட்டது) அப் போரை வெளிப்படுத்துகின்றது.

பெரியாழ்வார் அருளிய திருமொழி 1.3, சீதக்கடல் 28.

திருப்பாதாதிகேச வண்ணம்

மத்தக் களிற்று வசுதேவர் தம்முடை
சித்தம் பிரியாத தேவகி தன்வயிற்றில்
அத்தத்தின் பத்தாம்நாள் தோன்றிய அச்சுதன்
முத்தம் இருந்தவா காணீரே
முகிழ்நகையீர் வந்து காணீரே.

ஷை திருமொழி 1.8 தொடர்சங்கிலிகை, 10. தளர்நடைப் பருவம்.

திரைநீர்ச் சந்திர மண்டலம்போல்
செங்கண்மால் கேசவன் தன்
திருநீர் முகத்துத் துலங்கு சுட்டி
திகழ்ந்தெங்கும் புடைபெயரப்
பெருநீர்த் திரையெழு கங்கையிலும்
பெரியதோர் தீர்த்த பலம்
தருநீர் சிறுச்சுண்ணம் துள்ளம் சோரத்
தளர்நடை நடவானே.

ஷை திருமொழி 1.10, வட்டுநடுவே, 1. புறம்புல்கல்(—'மக்கள் மெய்தீண்டல்' எனத் திருவள்ளுவர் உலகியலைக் கூறியது வேறு. இது வேறு. இஃது அருட்டிறத்து நிகழ்வு,)

வட்டு நடுவே வளர்கின்ற மாணிக்க
மொட்டு நுனியில் முளைக்கின்ற முத்தேபோல்
சொட்டுச் சொட்டென்னத் துளிக்கத் துளிக்களன்
குட்டன்வந் தென்னைப் புறம்புல்குவான்
கோவிந்தன் என்னைப் புறம்புல்குவான்

நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி 2. 5. 2. இறைவன் ஆபரணாதிகளுடன் வந்து கலக்க ஆழ்வார் மகிழ்தல். 'அந்தாமத்து அன்பு' எனத் தொடங்குந் திருவாய் மொழித் திருப்பாட்டிற்கு அடுத்தது இது. இதை அவர் பாடியதாகக் கொள்ளலாமா?

திருவுடம்பு வான்சுடர் செந்தாமரை கண்கைகமலம்
திருவிடமே மார்வம் அயனிடமே கொப்பூழ்
ஒருவிடமும் எந்தை பெருமாற்கு அரனேயோ
அயன்மால் உருத்திரன் மூவருள் மாலுக்கு ஆண்குறி
உருத்திரன் என்பது சமயம் சொல்லும் சொல்லாகுமோ?
ஒருவிடம் ஒன்றின்றி என்னுள் கலந்தானுக்கே.

ஒருவிடம்-ஒருவுஇடம். நீங்கும் இடம்-ஆண்குறி. திருமாலின் ஆண்குறி அரன். என்னே! இதுவும் பாட்டோ? விஷ்ணு ஸஹஸ்ர நாமத்யாந சுலோகத்துள் வாஸ்தேயாம்(—மூத்திரம்) என்றுளது. இன்னம் சில சில வேறு நூலாட்சியாகக் காட்டலாவன உள. விரிவஞ்சி விடுத்தாம்.

அருளாளர் பாடியவற்றுள் முத்தம், சண்ணம், மொட்டு, ஒருவிடம் என்பன உள்ளன. அவர் தம் திருவுள்ளத்தைப் பொறுத்து அறிஞர் (ஞானிகள்) ஆண்டு இழியாதவாறு தம்மைக் காத்துக் கொள்வர். ஏனையோர் தாம் கருதியவாறே உளறும் தீவினையாளர் ஆவர். ஆயின் நாம் செய்வது யாது? "எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று பரிவதூஉம் சான்ரேர் கடன்" என்றவாறு பரிவதன்றி மற்றில்லை.

முத்தம்-கடிப்ரதேசம். சண்ணம்-ஆண்குறிப் பெயராகித் திரிந்து வழங்கப்படும் உறுப்பு. வைணவப் பெரும் புலவர் ஏறு எழுதியது இது: சிசுந என்பது சின்னம் என்று ஆயிற்று. அது சண்ணம் சுண்ணம் ஆகத் திரிந்தது. அது மக்கள் வழங்கும் வடிவாயிற்று. (கிண்ணம் கிண்ணி என்ருதல் போல்வது).

பிள்ளை-புள்ள, பிட்டு-புட்டு, பிடுங்கி-புடுங்கி, முதலியவற்றுள் பிகரம் புகரம் ஆயினவாறு சுண்ணம் சுண்ணம் ஆதல் இயல்பே. புய்த்தல் பிய்த்தல் பிய்ச்சல் பிச்சல் என்ருதலும் உண்டு. புயல் என்ற சொல்லின் அடி புய் என்பதே பிய் எனல் இல்லை. பிச்சி(க் கொண்டு போயிற்று) என்ற வழக்கும் பிய்த்து(க் கொண்டு போயிற்று) என்றதன் திரிபாகக் கொள்ளக்கூடும். புய்த்துக் கொண்டு போகும் ஆற்றலாற் ருன் புயல் என்ருயிற்று. ஆதலின், உகரம் இகரமாதலும் உண்டு என்க. ஓர் உண்மையை மறைக்க முடியவில்லை. சிசுந-சின்னம்-சண்ணம்-சுண்ணம் என வட சொல்லின் திரிபென்ருர் அவர். அது தமிழ்ச் சொல்லே. குருதி, புள் என்னுந் தமிழ்ப்பெயர் போல்வது.

விளக்க-நாணி விட்டனம். வாழ்நர்-வாணர், வீழ்நர்-வீணர், ஆழ்நம்-ஆணம். இவை முதலியன போல அச்சொல்லும் தமிழ்ச்சொல்லடியாகத் தோன்றியதே. அப்புலவர் தம் புலமைப் பெருக்கத்தாலும் புத்தியின் பெருக்கத்தாலும் மற்றும் ஒரு திறத்திற் பேத புத்தியைத் தோற்றினர். 'ஆழ்வார் அருளிச் செயல்கள்' என்றலே மரபு. ஆழ்வார் இயற்றிய பாடல் எனல் நல்வினைப்பாற்படாது. மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவை என்றெழுதப்படாது என்னும் பேதபுத்தியால், மாணிக்க வாசகர் இயற்றிய திருக்கோவை என்றது அவர்க்குத் தகாது. நம்மாழ்வார் இயற்றிய திருவிருத்தம் எனலாமோ? விருத்தம் செயப்படு பொருள். அது திருவடை கொண்டுள்ளது. அவ்விருத்தத்தை(ச் செயப்படுபொருளை)ச் செய்(வினை) முதலாகிய நம்மாழ்வார் அருட்செயலை ஏனையோர் (அருளில்லார்) செயலோடு ஒப்பவைத்து, நம்மாழ்வார் இயற்றிய திருவிருத்தம் என வாளா கூறல்-எழுதுதல் அபசாரம் ஆகும். செயப்படு பொருள் திரு என்னும் அடையொடு நிற்றற்குத்தகச் செயலும் உயரிய திறத்திற் குறிக்கப்படல் வேண்டும். செய்யுளாயின் குற்றமெனக் கொள்ளப்படாது. 'ஆக்கியோன் பெயர்' என்புழி அருளியோன் எனல் வேண்டுமென்பாரிலர். இம்மட்டும் இது நிற்க.

கறிபிடித்த ஊன்கடையில் கண்டவர்தம் கால்பிடித்துக்
　　கவ்வும் பொல்லா
வெறிபிடித்த நாய்க்கேனும் வித்தைபயிற் றிடலாகும்
　　வேண்டி வேண்டி
மறிபிடித்த சிறுவனைப்போல் வாத்தியார் மனம்மறுகி
　　வருந்தத் தங்கள்
குறிபிடித்துக் காட்டுவோர்க்கி யாவர்படிப் பிக்கவல்லார்
　　குமர வேளே. (567)

இது முதலாவது திருமுறை முடிவில் தனித் திருத்தொடை என்ற தலைப்புடையவற்றுள் 18ஆவது. இது தனிப்பாடலாகவே இருக்கலாம். தனிப்பாடற்றிரட்டில் இல்லாத இழிவு வேறு எங்கும் இராது. திருவருட்பாவில் இருத்தல் நன்றன்று. தகுதியதும் அன்று.

849 ஆவதிலும் 'பணப்பை விரிப்பார் அல்குற்பை விரிப்பார்க்கு' என்றுளது. இதுவும் திருவருட்பாவுள் இருக்கலாமோ? இது நெஞ்சோடு நெகிழ்ந்ததால் இருக்கலாம் எனத் துணிவர்.

தனித் திருவிருத்தம் என்று மற்றோரிடத்துள்ளும் ஒரு தலைப்புண்டு. அதில் 29ஆவது "புண்ணைக் கட்டிக் கொண்டே அதன் மேல் ஒரு புடவை கட்டிப் புதுமைகள் காட்டிடும் பெண்" (2778). என்றது. இது குற்றமாகக் கொள்ள நில்லாது. திருப்புகழ்த் திறத்தில் வண்ணத் திலக்கணம் என்று சொல்லித் தப்பலரிது.

மின்னைப் போலிடை மெல்லிய லாரென்றே
விடத்தைப் போல்வரும் வெம்மனப் பேய்களைப்
பொன்னைப் போல்மிகப் போற்றி இடைநடுப்
புழையிலே விரல் போதப் புகுத்திஈத்
தன்னைப்போல் முடைநாற்றச் சலத்தையே
சந்தனச்சலம் தான்எனக் கொள்கின்றேன்
என்னைப் போல்வது நாய்க்குலம் தன்னிலும்
இல்லை. அல்லது +எவற்றினும் இல்லையே. (2739)

இது திருவருட்பாவுள் ஒன்றுயிருத்தல் எத்திறத்தாலும் பொருந்தாது. இன்றும் பெண்டிர் முன்னர் இதைப் பிதற்றலும் செய்யார் பெரியோர்.

"பிரமன், விண்டு, உருத்திரன், மாயேச்சுரன் சதாசிவன், விந்து, பிரமம், பராசத்தி, பரசிவம் எனும் இவர்கள் திருச்சிற்றம்பலத்தாடும் இடதுகாற் கடைவிரல் நகத்தின் கடையுறுதுகள்" (3925)

"மலத்தடையால் தடையுறும் அயன், மால், அரன், மயேச்சுரன், சதாசிவன், விந்து, பிரணவப்பிரமம், பரை, பரம்பரன் எனும் இவர்கள், மணிப்பொதுவில் திருநடம் புரியும் துணையடிப் பாதுகைப்புறத்தே வயங்கு துகள்." (3926)

தேவர், இந்திரன், மால், பிரமன், ஈசானே முதலாம் வானவர், மன்றில் மலரடிப் பாதுகைப் புறத்தும் புகத் தரம் பொருந்தா மலத்து உறு சிறிய புழுக்கள்" (3927) எனச் சிவநிந்தை முதலிய பல சமய தெய்வநிந்தை தொடர்ந்து மூன்றில் இருப்பது பொறுத்தற்கு அரியது. நகத்தின் கடையிலுள்ள துகள், பாதுகைப் புறத்திலுள்ள துகள் என்ற தினும் மிகக் கொடியது மலத்திலுள்ள புழுக்கள் என்றது. சைவத்தில் திருக்கோயில்களில் மெய்யடியாரால் வழிபடும் மெய்ப்பொருள் சதாசிவம். அதை மலப்புழு எனத் துணிந்தவராக வள்ளலார் கொள்ளப் பெறுவாரோ? ஒரு போதும் பெருர்.

இத்தகைய இழிநிலைப் பாக்களைத் தனிப்பாடற்றிரட்டில் சேர்த்து விடலாம். திருவருட்பாவுள் இவை இருத்தல் பொருத்தம் ஆகுமோ? அறிஞர் நன்கு ஆய்ந்து முடிபு செய்ய முயல்வது நன்று. அன்புருவமான சிவம் ஒன்றே உளது என்னும் தலைப்பில் வேதம், வேதாந்தம், ஆகமம், ஆகமாந்தம் எல்லாவற்றையும் இசைந்து சிவம் ஒன்றே அன்றி வேறு கண்டிலேம். அருள் விளங்கிய திருச்சிற்றம்பலத்திலே அழியாப் பொருள் விளங்குதல் காண்மினோ! காண்மினோ! ஞான சன்மார்க்கமே தெளிமின்! ஞான நாடகக் காட்சியே நாம் பெறல் வேண்டும் என்றும், வேறிடங்களில் சன்மார்க்கம், சமரச சன்மார்க்கம், சிவ சமரச சன்மார்க்கம், சுத்தசிவ சமரச சன்மார்க்கம், அழியா ஒரு நெறியாம் சன்மார்க்கத் திருநெறி என்றும், வெவ்வேறு தொடரால் ஒரு மார்க்கத்தையே வற்புறுத்தியருளிய திருவருட்பிரகாச வள்ளலாரது திருவுள்ளத்தை யறிந்து தூய நிலையில் திருவருட்பா விளங்கச் செய்வது நல்லோர் எல்லோர்க்கும் உரிய கடனாகும். 'சீறியருளல் சிறுமையுடைத்து' —என்பது அருநந்தி தேவநாயனுர் அருள்வாக்கு. ஈண்டும் அதுவே நினைவில் நிறுத்தல் வேண்டும், இதைக் காண்போர்.



"தத்தா நமர்" என்றார்

க. கலியாணம், எம்.ஏ., டிப். எக்கான்.,

திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு சேதிநாட்டை மலாடர் கோமான் ஆண்டுவந்தார். அரசியல் நெறியும் அறநெறியும் வழுவாமல், பகைவரை வென்று, நீதியுடன் செங்கோலோச்சினார். சிவனடியார் வேடமே மெய்ப்பொருள் என்ற கொள்கையுடையவர். கோயில்களில் பூசை வழிபாடு சிறப்புற நடக்க வகை செய்தார். நாடி வந்த அடியவர்க்குக் கருத்தறிந்து குறைவறக் கொடுத்தார். இவ்வாறிருக்கு நாளில் முத்தநாதன் என்ற பகை மன்னன் அவருடன் போர் செய்து பலமுறை தோற்றுப்போனான். அவரை வஞ்சனையால் வெல்ல எண்ணினான். உடல் எல்லாம் திருநீறு பூசிக்கொண்டு, வாள் படையை மறைத்து வைத்த புத்தகக் கட்டை எடுத்துக்கொண்டு சேதிபர்கோன் அரண்மனையை யடைந்தான். பல வாயில்களையும் கடந்தான். கடைசி வாயிலில் நின்ற தத்தன் "அரசர் உறங்கப் போகிறார். சமயம் பார்த்தருள வேண்டும்" என்று தடுத்தான். "மன்னனுக்கு உயிர்க்குறுதி கூறப்போகிறேன். நீ, நில்" என்று முத்தநாதன் கூறி உள்ளே புகுந்தான். வேந்தன் பள்ளிக்கட்டிலில் துயில அரசி பக்கத்தே அமர்ந்திருந்தாள். அவள், வந்தவர் அடியார் என்றெண்ணி விரைந்து எழுந்து அரசரை எழுப்பினாள். அரசர் இறங்கி "தாங்கள் எழுந்தருளியது என் தவம்" என்று கூறி வணங்கினார். "உங்கள் நாயகர் உரைத்த ஆகமநூலை உனக்குச் சொல்வதற்காகக் கொண்டு வந்திருக்கிறேன், நீயும் நானுமாக மட்டும் இருந்து கேட்க வேண்டும்" என்றான் அந்த வஞ்சமனத்தான். அரசி அவ்விடம் விட்டு அகன்றாள். முத்தநாதன் ஒரு ஆசனத்தில் அமர, அரசர் கீழே நின்று "அருள் செய்க" என்றார். அப்பாதகன் புத்தகக்கட்டை அவிழ்ப்பவன்போல அதிலுள்ள குறுவாளை எடுத்து, தான் கருதி வந்தபடியே செய்து முடித்தான். ஐயத்தோடு உள்ளே அனுப்பிய மெய்காப்பாளனான தத்தன் உள்ளே புகுந்து முத்தநாதனை வாள்கொண்டு வெட்ட ஓங்கினான். குருதிசோர விழுகின்ற கோமான் தத்தனை நோக்கி "தத்தா நமர்" என்று தடுத்தார். "யான் இனிச் செய்ய வேண்டுவது யாது" என்றான் ஏவலன். "இந்த அடியாருக்கு ஏதும் நேராது கொண்டுபோய் விட்டுவா" என்றார் கோவலூர்க் காவலனார். இதையறிந்த மக்கள் பொய் வேடத்தானைக் கொல்லப் புடைசூழ்ந்தனர். அரசர் ஆணையை எடுத்துக்கூறி அவர்

களையெல்லாம் விலக்கி முத்தநாதனை நகர எல்லையெல்லாம் கடந்து பாதுகாப்பான இடத்தில் விட்டுவிட்டு வந்து அதுவரை உயிர் தாங்கியிருந்த வேந்தருக்கு அறிவித்தான். அரசர் அவனை நோக்கி 'ஐயனே! இன்று நீ செய்தது யார் செய்யவல்லார்' என்று கூறி, தம் மக்களுக்கும், பரிவாரத்தாருக்கும் அவர்கள் செய்யவேண்டியவற்றை யெல்லாம் சொல்லி, "திருநீற்றன்பு பாதுகாத்து வாருங்கள்" என்று அறவுரை பகர்ந்து அரனடி நீழலடைந்தார்.

பகைவனுக்கு அருள்செய்யும் பண்பை இந்த நாயனர் வரலாற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்கிறோம். முத்தநாதன் செய்த தீங்கினை வெளிப்படையாகச் சொல்ல மனம் வராத சேக்கிழார் பெருமான் "நினைந்த அப்பரிசே செய்தான்" என்கிறார். நினைவாற்றல் மிக்க அவரே ஏனாதிநாத நாயனர் புராணத்தில் இதுபோன்ற தீயசெயலை "தன் கருத்தே முற்றுவித்தான்" என்பார். அடியவர் வரலாற்றில் அமங்கலச் சொற்கள் புணராமல் அமைக்கும் சேக்கிழாரடிகளின் அருள் திறனை யாதென்று இயம்புவது! அப்புலவர் பெருந்தகையார் சோழநாட்டு முதலமைச்சராக இருந்தவர். நாயன்மார் வரலாறுகளை எழுதுமுன் அவர்கள் வாழ்ந்த பதிகளுக்கெல்லாம் சென்று விசாரித்து, சிற்பங்கள், கல்வெட்டுகள் இவற்றையெல்லாம் ஆராய்ந்து பெரியபுராணம் இயற்றியருளினர். சேக்கிழார் இரண்டாங் குலோத்துங்கன் காலத்தில் கி.பி. பன்னிரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் இராசேந்திர சோழன் (கி.பி. 1012-1044) கல்வெட்டு ஒன்று பின்வருமாறு :—"கோபரகேசரிவர்மரான இராசேந்திரசோழ தேவற்கு யாண்டு மூன்றுவது உடையார் ஸ்ரீ ராசராசேச்சுர முடையாருக்கு ஸ்ரீகாரியம் செய்கின்ற பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியனுன தென்னவன் மூவேந்த வேளான்யாண்டு மூன்றுவதுவரை செய்வித்த செப்புப் பிரதிமங்கள்...... பாதாதிகேசாந்தம் இருபதிற்று விரல் உசரத்து இரண்டு கையுடையவரான கனமாகச் செய்த தத்தாநமரேகாண் என்ற மிலாடுடையார் ஒருவர்." இது, முதல் இராசேந்திரன் காலத்தில் தஞ்சைக் கோயில் நிர்வாக அதிகாரியான மூவேந்தவேளான் செய்து வைத்த பல செப்புச் சிலைகளில் 'தத்தா நமரே காண்' என்ற மிலாடுடையார் சிலை ஒன்று என்பதைக் குறிக்கிறது. நம்பியாண்டார் நம்பியும் திருத்தொண்டர் திருவந்தாதியில் இவ்வாறே கூறக் காண்கிறோம். திருநாகேசுவரம், திருக்கோவலூர், திருப்பழனம் ஆகிய கோயில் கல்வெட்டுக்களிலும் 'மிலாடுடையார்' என்ற சொற்கள் காணப்படுகின்றன. மலையமான் திருமுடிக்காரி ஆண்டது மலையமான் நாடு, மலையநாடு, மலாடு என்று ஆயிற்று, சோழநாடு சோனுடு என்பது போல். மேற்சொன்னவற்றிலிருந்து கல்வெட்டுச் செய்திகளை வரலாற்றுக்கு அடிப்படையாகக் கொண்டு புராணம் பாடிய சேக்கிழாரின் செம்மை நலத்தை என்னென்றியம்புவது!

குறிப்பு: மெய்ப்பொருள் நாயனரின் கார்த்திகை உத்திர நட்சத்திரத்தை யொட்டி இக்கட்டுரை வெளிவருகிறது.

திருவுருவ உண்மை உணர்த

வள்ளி தெய்வயானை

புலவர் திரு. ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

முன்னுரை :

இறைவன் தனது வடிவிலும் இயல்பிலுமே மனிதனைப் படைத்தருளினான் எனச் சிலர் கூறுவதுண்டு. அஃது எங்ஙனமாயினும், மனிதன் கடவுளைத் தனது வடிவமும் இயல்பும் அமையத் தனக்கு ஏற்பப் படைத்துக்கொண்டான் எனக் கூறுவதும் ஒருவகையில் பெரிதும் பொருந்தும். இதனையே சுருக்கமாகவும், வேறொரு வகையில் கூறமுற்படின், மனித வாழ்க்கைக்குரிய மாட்சிமை மிக்க உண்மைகள், நீதிகள், ஒழுகலாறுகள், உயரிய குறிக்கோள்கள், தத்துவ நுட்பங்கள் ஆகிய பலவும், கடவுளின் திருவுருவங்களிலும், வரலாறுகளிலும், வழிபாட்டு முறைகளிலும் பிறவற்றிலும் உருவக முறையில் அமைத்து, நமக்கு நம் முன்னோர்களாலும், நூல்களாலும் செவ்விதின் அறிவுறுத்தப்பட்டுள்ளன எனக் கூறுதல் அமையும். இதனையே,

> "குறிகளும்அடை யாளமும், கோயிலும்
> நெறி களும்அவர் நின்றதோர் நேர்மையும்,
> அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
> பொறியி லீர்மனம் என்கொல் புகாததே?"

என வரும் திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகைப் பாடல், நமக்குச் செவ்விதின் உணர்த்தியருள்கின்றது.

"புராணங்கள் என்பவை, உயரிய தத்துவ நுட்பங்களைக் கதைகள் அல்லது புனைகதைகளின் வாயிலாக, அழகும் சுவையும் அமையச் செய்து நமக்கு அறிவுறுத்துகின்றன. அவ்வாற்றாற் கடினமும் சிக்கலும் மிக்க உயரிய தத்துவ நுட்ப உண்மைகளைப் பெரும்பாலான பொது மக்களின் எளிய உணர்விற்கும் எட்டித் தெளிவுறப் பதிந்து புலனாகும் படி, புராணங்கள் விளக்குகின்றன. கல்வி அறிவற்ற பாமரமக்களுக்குத் தத்துவக் கலையின் கருத்து நுட்பங்களில் ஆவலும் ஆர்வமும் ஏற்படச் செய்யும் கடினமான வேலையினை, இந்தியநாடு மிக எளிதாதச் செய்து முடித்து வெற்றி கண்டுள்ளது." *

---

* "The Puranas contain the truth dressed up in myth and stories, to suit the weak understanding of the majority. The hard task of interesting the multitude in the metaphysics is achieved in India."

—*Dr. S. Radhakrishnan.*

வலமும் இடமும் :

இவ்வடிப்படையில், இக்கால நிலையில், நாம் வள்ளி தெய்வயானை திருமணங்கள் பற்றிய முருகனின் வரலாற்றினை, இங்கு ஒரு சிறிது ஆராய்தல் பயனுடைத்து ஆகும். முருகனின் இருபுறத்துமுள்ள தேவியர் இருவருள் தெய்வயானையம்மை யார்? வள்ளியம்மை யார்? என்பது நம்மில் பலருக்குத் தெரிவதில்லை. முருகனின் இடப்பக்கம் இருப்பவர் தெய்வயானையம்மை, வலப்பக்கம் இருப்பவர் வள்ளியம்மை. பண்டைக் காலத்தில் நம் முன்னோர்கள் சிற்சில செய்திகளைக் குறிப்பினாலேயே உணரவும் உணர்த்தவும் வல்லவராக விளங்கியிருந்தனர்.

ஒரு குடும்பத்தில் ஆடவரும் பெண்டிருமாகப் பலர் ஓரிடத்தில் ஒருங்கு திரண்டிருப்பின், யார் யாருக்கு என்ன உறவு உரிமையுடையவர் என்பது நாம் வினவி அறிந்து கொள்ள வேண்டாமலேயே, நயத்தக்க நாகரிக நிலையில், குறிப்பிற் பெறப்பட அவர்கள் வகை செய்திருந்தனர். பண்டைய மரபின்படி ஓர் ஆடவனுக்கு இடப்புறத்தில் ஒருத்தி இருந்தால், அவள் அவனுடைய மனைவி என்று நாம் குறிப்பாகத் தெரிந்து கொள்ளலாம். சகோதரிகளோ பிறரோ ஆயின் அவர்கள் வலப்பக்கம் இருப்பர். இம்மரபினால் ஒருவருக்கொருவர் உள்ள உரிமையினைப் பிறர் எளிதில் கருதி உணர்ந்துகொள்ள வாய்ப்புண்டு. மனைவி இடப் பக்கத்திற்குரியவளாகச் கொள்ளப்பெற்றமை, அப்பக்கத்திலேயே ஆடவனின் இருதயம் அமைந்திருப்பது பற்றியேயாகும். "என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே" என்பது சங்கப் பாடல்.

உமையம்மையார் சிவபெருமானின் இடப்பக்கத்தில் வீற்றிருந்தருளுதல் காணலாம். தெய்வயானையம்மை முறைப்படி மணந்து கொள்ளப் பெற்ற முதல் மனைவியாதலின், அவள் இடப்பக்கத்திற்குரியவள் ஆயினள். வள்ளியம்மை களவு மணத்திற்குரியவளாகப் பரிபாடல் முதலிய நூல்கள் பலவும் கூறுதலின் அவள் வலப்பக்கத்திற்கு உரியவள் ஆயினள். "அம்பிகையை இறைவன் உலகறியத் தீவேட்டமை, கலை நவின்ற பொருள்கள் எல்லாம் கலங்காமையின் பொருட்டே" என்று, மணிவாசகர் அருளிச் செய்திருத்தலால், இன்னோரன்ன உலகியற் செய்திகளும், இறைவனின் திருவுருவ அமைப்புக்களில் நுட்பமாக அமைத்து விளக்கப்படுகின்றன என்று, நாம் உணர்தல் வேண்டும். வேறு வழிகளில் இவற்றிற்கு விபரீதக் கருத்துக்கள் கொண்டு நாம் மயங்குதல் கூடாது.

"உலைப்படும் மெழுக தென்ன
உருகியே ஒருத்தி காதல்
வலைப்படு கின்றான் போல
வருந்தியே இரங்கா நின்றான்
கலைப்படு மதியப் புத்தேள்
கலங்கலம் புனலில் தோன்றி
அலைப்படு தன்மைத் தன்றே
அறுமுகன் ஆடல் எல்லாம்!"

என வரும் கந்தபுராணச் செய்யுள், இங்கு நாம் நுண்ணிதின் எண்ணியுணர்தற்கு உரியது.

ஆண்மையும் அருளும் :

ஒரு மனிதன் ஆண்மையும் அருளும் உடையனுதல் வேண்டும். ஆண்மையிருந்து அருள் இல்லாதவன் முரடனுவான். அருளிருந்து ஆண்மையில்லாதவன் கோழையாகிவிடுவான். ஆதலின் ஆண்மையும் அருளுமாகிய இரண்டும் நமக்கு மிகவும் இன்றியமையாதவை. முருகன் ஆண்மையுடையவனுய்ச் சூரபதுமனை வெற்றி கொண்டு, தெய்வயானையை மணந்தருளினுன். அருள் உடையவனுய் மிகவும் தாழ்ந்து எளிவந்து வள்ளியை மணந்தருளினுன்.

காதலும் கடமையும் :

மனித வாழ்க்கையில் நிகழும் உணர்ச்சிகள் பல. அவற்றுள் காதல் உணர்ச்சியும் கடமை உணர்ச்சியும், மனித வாழ்க்கையை வளப்படுத்திச் சிறப்புறுவிக்கின்றன. நம்மில் ஒரு சிலருக்குக் காதல் உணர்ச்சி மட்டுமே மிகுதியாக இருப்பதுண்டு; கடமை உணர்ச்சி அவ்வளவாக இருப்பதில்லை. வேறு சிலருக்குக் கடமை உணர்ச்சியே மிகுந்து ஓங்கியிருக்கும்: காதல் உணர்ச்சி கரந்து குறைந்திருக்கும். இவ்விரு திறமும் ஒருவகையிற் செவ்விய அல்ல. இவ்விரண்டும் இருவகை எல்லைகள். ஆதலின் இவைகள் ஒன்றற்கொன்று சமமாக ஏற்றபடி இருத்தல் வேண்டும். எனினும், இவ்விரண்டனுள்ளும் காதல் உணர்ச்சியினை விட, ஒருவகையிற் கடமை உணர்ச்சிக்கே முதலிடம் தருதல் வேண்டும், முருகனின் கடமை உணர்ச்சிக்குத் தெய்வயானையும், காதல் உணர்ச்சிக்கு வள்ளியம்மையும், சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றனர் எனலாம்.

தெய்வயானையின் சிறப்பு :

கடமையுணர்வு மிக்கவர்கள் மிகவும் அடக்கமாக இருப்பர். ஏனையோரை முன்னிட்டுவைத்து, அவருக்குத் தாம் பின்னிருப்பர். தெய்வயானையார் அத்தகையவர். முருகனின் துதிப்பாடல்களுள், வள்ளியம்மையே பெரிதும் போற்றிப் புகழப்பெறுவர். சிறுபான்மையாகவே தெய்வயானையார் துதிநூல்களில் குறிக்கப்பெறுதல் மரபு. இல்லறமாகிய கற்பக மரத்துக்கு ஆணிவேர் போன்றவர் மனைவியர். ஆணிவேர் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மறைந்திருந்தே, மரம் செழித்தோங்கி வளரச் செய்யும். அதுபோலவே ஆணிவேர் போன்ற மனைவியர், தாம் அடக்கமாகவே மறைந்திருந்து செயற்பட்டு, இல்லறமெனும் நன்மரம் தழைத்தோங்க உழைத்து வருவர். அத்தகையதொரு நிலையினைத் தெய்வயானையம்மையார்பால் காணலாம்.

சிறியவர்களுக்கு விட்டுக்கொடுத்து, அவர்களுக்கு அன்புடன் உதவி, அவர்களைப் பல்லாற்ருலும் சிறப்பித்து வாழச் செய்வது, பெரியவர்களின் இயல்பு. ஆதலின் தமக்குப் பின்வந்த வள்ளியம்மையார்க்கே எல்லாச் சிறப்புக்களும், புகழ்ச்சிகளும் அமையும்படி இசைந்து, அவருக்கே ஒருவகையில் முதன்மை அளித்து ஏற்றம் நல்கி நிற்பது, தெய்வயானையம்மையாரின் சிறப்பியல்பு எனலாம்.

வள்ளியம்மையின் மாட்சி :

ஒப்புயர்வற்ற சிறந்த பெருமகன் ஒருவன், உயர்ந்தவர்கள் பலரும் போற்றத் தலைமை நிலைபெற்று விளங்குதல் வேண்டும். அதனேடு தாழ்ந்தவர்களுக்கும் இரங்கி எளிவந்து, அவருடன் கலந்து பழகித் தண்ணளி புரிபவனுகத் திகழ்தல் வேண்டும். முருகன் தெய்வயானை

அம்மையை மணந்ததனுல், உயர்ந்தவர்கள் உவந்தேத்தும் சிறப்புடைய வனுதல் தெளிவு. வள்ளியம்மையை விரும்பி மணந்ததனுல், அப்பெருமான் ஏழை எளியவர்களுக்கும் தாழ்ந்து எளிவந்து கலந்து பழகித் தண்ணளி புரியும் தன்மையனுதல் வெளிப்படும்.

இறைவனுக்குப் பரத்துவம், சௌலப்பியம் என்னும் இருவகை குணங்களும் இன்றியமையாதனவாக நூல்கள் கூறும். பரத்துவத்திலும் சௌலப்பியமே இறைவனுக்குப் பெரிதும் சிறப்பு அளிப்பதாகும். முருகன் தெய்வயானையை மணந்தது பரத்துவம் (மேன்மை). வள்ளியம்மையை மணந்தருளியது சௌலப்பியம் (எளிமை) "வான் பழித்து இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்" என வரும் திருவாசகம், எளிவந்தருளும் இறைவனின் பெருங்கருணைத் திறனைப் புகழ்ந்து போற்றியிருத்தல் காணலாம்.

"இறைவன் தன் அடியவர்கள்பால் செய்யும் அருளின் சிறப்பு, உலகில் ஓர் ஆண்மகன் ஒரு பெண்மகளிடம் கொள்ளும் காதலன்பைப் போன்றதாகும். இறைவன் தன் அடியவர்களை நேசிக்கும் திறன், மிகச் சிறந்த ஓர் அரசப் பெருமகன், மிகவும் எளிய ஓர் ஏழைக்குடிமகளைக் காதலிப்பது போன்ற இயல்பினது. அரசன் அக்குடிமகளைத் தன் நிலைக்கு உயர்த்துதல் ஒல்லாது. ஏனெனில், அங்ஙனம் செய்யின், அவள் தனக்கே உரிய நிலையையும் பண்பையும் இழந்து குன்றிப்போவாள். தனது அரச இயல்புகள் எல்லாம் பொலியச் செல்லின், அவ் எளிய ஏழைக் குடிமகள் மிகவும் அச்சங்கொண்டு நடுங்கி, அயர்ந்து மறைந்து கொள்வாள். அதனுல் அவன் தன்னை மிகவும் எளியவனுக்கிக் கொண்டு, தான் விரும்புகின்ற ஏழைப்பெண், தன்னுடன் சமநிலையில் கலந்து பழகிக் காதலிக்கும் வாய்ப்பைப் பெறுவதற்கே ஏக்கற்று முயல்வான்" † என அறிஞர் ஒருவர் கூறியிருப்பது, இங்கு நாம் அறிந்து இன்புறற்பாலது.

முருகன் தன் அன்பர்களிடம் அவர்களிலும் மிக்க அன்புடையவனுக விளங்குகிருன்; தன் அடியவர்களின் குற்றங்களையும் குணமாகக் கொண்டு மகிழ்கின்ருன்; தன் நிலையில் அரியனும் பெரியனுமேயாயினும் முருகன் தனது அடியவர்களுக்கு மிகவும் தாழ்ந்து எளிவந்து தண்ணளி புரிந்து அவர்களை ஆட்கொள்ளுகிருன்; தன்னை அடைவதற்கு அடியவர்கள் கொள்ளும் ஆர்வத்தினும், தான் அடியவர்களைச் சேர்வதற்கு மிகவும் விதுவிதுத்து துடிக்கும் பேரருட் பெற்றியுடையவனுய் திகழ்கின்ருன்-என்ருற்போலும் அரிய பல உண்மைகளை, வள்ளியம்மை திருமண வரலாறு உணர்த்திக் கொண்டுள்ளது.

---

† "Kierkegaard describes the encounter in terms of a love offair. He compares the revelation of the divine love to a human courtship whereby a king would woo a peasent girl. He cannot raise her to his own rank, for this would cause her to cease to be herself. He cannot come to her in all his own splendour, for this would cause her to hide from him. So he chooses to come to her in the form of great humility, seeking equality only with the one he loves."

—*Pauline M. Webb.*
We Believe in god.

ஆட்பாலவர்க்கு அருளும்வண்ணம் :

இறைவன் தன் அடியவர்களை இருவகைகளில் ஆட்கொள்ளுகின்றான். அடியார்கள் சிலர் இறைவனின் திருவடிகளில் தாமே அடைக்கலம் புகுந்து, அவற்றைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுகின்றனர். வேறு சிலரை இறைவன் தானே சென்று, பலவகைகளில் முயன்று அவர்களைப் பற்றிப் பிடித்து ஆட்கொண்டு அருளுகின்றான். இவ்விரு திறநிலைகளையும் நாம் இயற்கையுலகிற்கூடக் காணலாம். குரங்குக் குட்டி தன் தாயினைத் தானே சென்று விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு வளர்கின்றது. பூனையின் குட்டியோ, தன் தாயினால் வாயிற் கவ்வி எடுத்துச்சென்று, தக்க இடங்களில் வைத்து ஏற்றபெற்றிகாக்கப்படுகின்றது. இவ்விரண்டையும் முறையே 'மர்க்கட நியாயம்', 'மார்ச்சால நியாயம்' எனச் சமய தத்துவ நூல்கள் கூறும்.

சூரசம்மாரத்திற்குப் பின்னர், திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருந்த முருகனை மேருமலையிலிருந்த தெய்வயானை, தானேதேடிக் கொண்டு வந்து சார்ந்து மணந்து கொண்டனள். இது மர்க்கடநியாயம். முருகப்பெருமான் தானே வள்ளியம்மையைத் தேடிச் சென்று அவள்பாற் பல திருவிளையாடல்கள் புரிந்து, அவளைக் களவுமுறையில் எடுத்துச்சென்று மணம் புரிந்து கொண்டான். இது மார்ச்சால நியாயம். "ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான் புகில் அளவில்லை" எனத் திருஞானசம்பந்தர் பாடியதற்கேற்ப, இறைவன் தன் அடியவர்களை ஆட்கொண்டருளும் வண்ணம் பல திறப்படும். அவற்றுள் தலைசிறந்த இருபெருந் திறத்தினைத் தெய்வயானை, வள்ளியம்மை திருமணங்கள் குறிக்கின்றன எனலாம்.

திருமுருகாற்றுப்படை :

தெய்வயானை முருகனின் கிரியா சக்தி; வள்ளியம்மை இச்சா சக்தி. "மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்" என்னும் திருமுருகாற்றுப்படை வரிக்கு, "மறக்கற்பில்லாத அறக்கற்பினையும், ஒளி பொருந்திய நுதலினையுமுடைய இந்திரன் மகள் தெய்வயானையார் கணவர்; இப்பெயரை முற்கூறினார் படைத்தற்கும் காத்தற்கும் உரிமை தோன்ற" என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதி இருக்கும் உரைவிளக்கம் இங்கு அறிதற்பாலது.

இவ்வாறே, "குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்மடவரல் வள்ளியொடுநகை அமர்ந்தன்று" என்று வரும் வரிகளுக்கு, அவ் உரையாசிரியர் "காம நுகர்ச்சி இல்லாத முருகன், இங்ஙனம் வள்ளியம்மையோடு நகை அமர்ந்தான், உலகில் இல்வாழ்க்கை நடத்துதற்கு என்று உணர்க" என்று எழுதியிருப்பது, நாம் பெரிதும் சிந்தித்து உணர்தற்குரியது.

முத்திக்கனி தரும் முருகன் :

கடவுள் ஒருவகையிற் கருத்துப்பொருள்; அவருக்கு வடிவமும் வண்ணமும் இல்லை. எனினும் நம் முன்னோர்கள் அவரைக் கருதியுணர்ந்து, கண்டு அனுபவித்து, அவருக்கு வண்ணமும் வடிவமும் பிறவும் அமைத்து விளக்கியுள்ளனர். அம்முறையில் தெய்வயானையை அமுதவள்ளி என்றும், வள்ளியைச் சுந்தரவள்ளி என்றும் நூல்கள் கூறுகின்றன. இருவரையும் நாம் ஏற்ற பெற்றி உணர்ந்து தியானித்துப் போற்றுவதற்காகத் தெய்வயானை பொன்னிறம் வாய்ந்தவர் என்றும், வள்ளியம்மை பசுமை நிறம் உடையவள் என்றும், பெரியோர்கள்

குறிப்பிட்டருளியுள்ளனர். தெய்வயானையின் கையிலிருப்பது செந்தாமரை மலர். வள்ளியம்மை கையில் விளங்குவது செங்கழுநீர் மலர். இங்ஙனம் தெய்வயானையும், வள்ளியம்மையும் முருகனின் இருபுறத்தும் விளங்குதல் "கங்கையும், யமுனையும் கனை கடலுடன் சேர்ந்தாற் போலவும்", "கற்றையங்கதில் வெண்திங்கள் இருந்துழிக் கனலிப்புத்தேள் உற்றிடும்தன்மை" போலவும், இருப்பதாகக் கச்சியப்பசிவாச்சாரியார் கந்தபுராணத்தில் கவினுறப் பாடுகின்றார். மேலும் அவர்,

"கல்லகம் குடைந்த செவ்வேற்
கந்தன் ஓர் தருவ தாகி,
வல்லியர் கிரியை ஞான
வல்லியின் கிளையாய்ச் சூழப்,
பல்லுயிர்க் கருளைப் பூத்துப்,
பவநெறி காய்த்திட்டு, அன்பர்
எல்லவர் தமக்கும் முத்தி
இருங்கனி உதவும் என்றும்."

—கந்தபுராணம்.

என்னும் பாடலால், "தெய்வயானையாகிய ஞான சக்தியும், வள்ளியம்மையாகிய கிரியா சக்தியும் கிளைகளாகச் சூழ்ந்திருக்க, அருளாகிய மலர்களைப் பூத்து, இறப்பும் பிறப்பும் போகக் காய்த்து, அன்பர்கள் எல்லோருக்கும் முக்தியாகிய இனிய நறுங் கனியினை அளிக்கின்ற கற்பகமரம் ஆக முருகப் பெருமான் விளங்குகின்றான்" எனச் சிறப்பித்துப் பாடியருள்கின்றார்.

முடிவுரை :

அத்தகைய முருகப் பெருமானை, வள்ளி தெய்வயானையருடன், முருகன் அறுநாட் பெருவிழாப் புனித நாளில், நாம் அனைவரும் அன்புடன் பணிந்து போற்றி வணங்கி, நலம் பலவும் பெற்று உய்வோமாக.

பெருமகன் (மஹாதேவன்)

இசைப்பேரரசி. சேலம் திருமதி எஸ். ஜெயலட்சுமி

(1) "உள்ளம்கவர் கள்வன்"

அதைப்போலத் திருஞானசம்பந்தரும் இறைவனுடன் தமக்குள்ள தொடர்பை சற்றும் மறவாது மூன்று வயதுக் குழவிப்பருவத்திலேயே எம்பிரானால் ஆட்கொள்ளப்பட்டு இவ்வுலகத்தின் மாசு சிறிதும் தம்மீது ஏற்காதவராயினர். கவுணியர் குலத்திலே அந்தணர் மரபிலே உதித்த பிள்ளையார் அருமை பெருமையோடு வளர்ந்து வரலானர். இவ்வாறிருக்கையில் பிள்ளையார் மூன்ருவது பிராயத்தை அடைந்திருக்கும்போது சிவபாதவிருதயர் வழக்கம்போல் ஒருநாள் திருக்குளத்திலே நீராடி இறைவனைத் தொழுது வருவதற்காக வீட்டினின்றும் புறப்பட்டார். இச்சிறு குழந்தையும் உடன் வருவேனென்று அழுதுகொண்டு தொடர்ந்தது. அருமைத் தந்தையும் குழந்தையை அழவிட மனமின்றி உடனழைத்துச் சென்ருர். கரையின்கண் பாலகன் நிற்க, தந்தையார் விரைவாகத் தமது கடமைகளைச் செய்யலானர். ஒரு கணம் நீரில் மூழ்கிய தந்தையைக் காணப்பெருத சிறுவன் அச்சமடைந்து கண்களைப் பிசைந்து கொண்டு அதரம் துடிக்க அழலாயினன். இப்பிறவிக்குத் தந்தையான இவரைக் காணுத சம்பவம் எழுபிறப்பிற்கும் தந்தையான ஈசனின் பிரிவை அவருக்கு உணர்த்திற்றுப் போலும். எல்லாம் வல்ல அவ்விறைவனைத் தமது வாழ்வில் ஒரு கணமும் மறவாது வாழ்ந்தவர் அல்லவோ திருஞானசம்பந்தப் பிள்ளையார்.

தோணியப்பர் தம் தேவியாருடன் வீற்றிருக்கும் சிகரத்தை நோக்கிய குழந்தை தன் பழைய தொடர்பை உணர்ந்தாற்போல், "அம்மே! அப்பா!" என்று அழைத்து அழுதது. உலகத்தின் துயர்துடைக்கும் இவ்வழுகைக் குரலைக் கேட்ட தோணியப்பர் சிவபாதவிருதயர்க்கும் அவர் மனைவியாருக்கும் தாம் அளித்த வரத்தை நினைவு கூர்ந்தவராய் உமையம்மையோடும் பிள்ளையாரின் முன்னர் எழுந்தருளி உலகெலாம் புரக்கும் அன்னையாம் தேவியைக் குழந்தைக்கு ஞானப்பால் ஊட்டுமாறு பணித்தருளினர். கருணையே வடிவான அம்மையும் எண்ணரிய சிவஞானத்தின்னமுதம் குழைத்தருளிப் பொன்வள்ளத்தில் பாலமுதத்தைக் குழந்தைக்கு ஊட்டியருளினர்.

ஞானசம்பந்தர் அருள் வரலாறும் ஒப்பற்ற தீந்தமிழ்ப் பதிகங்களும் அவர் ஆண்டவனின் பெருங் கருணைக்கும், திருவருளுக்கும் முற்றிலும் பாத்திரமானவர் என்பதைத் தெள்ளென விளக்குகின்றன. இறைவனின் திருவருளுக்கு ஓர் எல்லை உண்டோ?

இருபதாயிரம் மைல் வேகத்தில் விண்வெளிப் பயணம் செய்யும் காலத்தில் நாம் இருக்கிருேம். காலப்போக்கில் மனிதனின் மூளைத்தின் இன்னும் என்னென்னவெல்லாம் கண்டுபிடிக்கப் போகின்றது என்பதை நாம் அறியோம். மேலும் தற்கால விஞ்ஞானமெல்லாம் கண்ணால் காணப்படும் பொருள்களின் நிலையை மட்டுமே ஒட்டியவைகளாகவுள்ளன. இன்னும் நமக்கு அப்பாற்பட்ட மனே உலகம், ஆன்ம உலகம் ஆகியவைகளும் உள்ளன. தூலப்பொருள்களின் சக்தி இவ்வளவானல், மனேவேகமும் அதன் சக்தி எத்தன்மையது என்பதை

யாரே அறிவார்! ஆகையால் மனதின் திறனுக்கும் அறிவின் திறனுக்கும் அப்பாற்பட்ட ஆன்ம சக்தியைப் பற்றி அறியாதவர்களாகிய நாம் அதன் ஆற்றலையும் தன்மையையும் வரையறை செய்யக்கூடிய தன்மை வாய்ந்தவர்களல்லர். கங்கையும் காவிரியும் பாய்கின்ற புண்ணிய பூமியாகிய பாரதநாடு ஆன்மிகத் துறையிலும் வளமிக்க திருநாடு. அதிலும் பிறநாட்டவர்களின் ஆதிக்கத்தினல் பாதிக்கப்படாத தென்னகம் ஆன்மிகச் சூரியன் தெள்ளென ஒளிவீசும் திருநாடு. மன்னுயிரைத் தன்னுயிர்போல் எண்ணி வாழும் தெய்வ வாழ்விற்கு ஈடு இவ்வுலகில் எதுவும் இல்லை. உயிர்கள் யாவற்றையும் இறைவன் திருவடிவாகவே எண்ணி ஒப்பற்ற வாழ்வு வாழ்ந்த மெய்யடியார்கள் பலரும் வாழ்ந்த பொன்னடு இது.

இன்னிசையால் தெய்வத் தமிழைப் பரப்பிய ஞானசம்பந்தர் போன்ற அடியார்கள் வாக்கிலே சொன்னது சொன்னபடி நடந்ததென்ருல் நாம் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை. தென்னடுடைய சிவனுக்கு விருப்பமான தேமதுரத் தமிழ்மொழியின் சக்தியும் அப்பேர்ப்பட்டதாகும். சைவ நெறியாகிய தெய்வ நெறியையும் ஆதிசிவன் பெற்ற மொழியாகிய செந்தமிழ் மொழியையும் ஒருங்கே வாழவைக்க வந்த ஞானசம்பந்தர்து திருவடிகளைத் தொழுது, அவருடைய தெய்வீகப் பாக்களை ஆராயப் புகுவோமாக. திருஞானசம்பந்தப் பெருமான் பதிகங்களையே நிலைக்களனுகவைத்து அவர் பீடுடைப் பெம்மானுடன் உறவாடிய வகையைப் பார்க்கப் போகின்ருேமாதலால் புராண வரலாறுகள் அதிகமாக இடம் பெருது. பதிகம் பாடப்பெற்ற சூழ்நிலை, இடம், காலம் இவை மட்டுமே குறிக்கப்பெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அகிலாண்ட நாயகியும் நாயகனுமான அம்மையப்பரால் இங்ஙனம் அருளப்பெற்ற குழந்தை ஆளுடையப்பிள்ளையாளுர். சிவஞானத்தின் தொடர்பு ஏற்பட்டதால் திருஞானசம்பந்தராயினுர்.

சிவஞானப்பாலுண்ட பிள்ளைப்பெருமான் பேரானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கி ஞானமயமாகி, முகமெல்லாம் ஒளிவிச நின்ருர். தம் கடன்களை முடித்துக்கொண்டு வந்த சிவபாதவிருதயர் குழந்தையின் வாயில் பால் வழிந்து கொண்டிருப்பதைக் கண்டு; மற்றேதும் அறியாதவராய், "இங்ஙனம் எச்சில் மயங்க யார் அளித்த பாலை உண்டாய்", என்று கோபத்துடன் வினவினுர். அக்குழவிப் பெருந்தகையான பிள்ளையார் மகிழ்ச்சிப் பெருக்குடன் தன் சின்னஞ்சிறு பொற்கைகளால் உயர்ந்து நின்ற திருத்தோணியப்பரது கோபுரத்தைச் சுட்டிக் காட்டினுர். தமிழ்த்தாய் செய்த அருந்தவத்தாலும் மாநிலத்தோரின் நற்பயனுலும் தெய்வீகத் தேவாரப் பதிகங்கள் மடைதிறந்து வெள்ளமென சம்பந்தப் பிள்ளையாரது திருவாயினின்றும் பொழிந்தன.

"என்னை இங்ஙனம் செய்தது யார் என்று கேட்கிறீர்கள்! இதோ அவன் யாரென்று நன்ருக விளக்கிச் சொல்கிறேன். என் அழுகைக் குரலைத் தன் திருச்செவியால் கேட்டு எனக்குப் பாலமுதம் அருளிய அவன் தன் திருச்செவியில் தோடு அணிந்திருப்பான், தோடு அணிந்திருக்கும் அவனது இடது பாகத்தில் அம்மையும் வீற்றிருப்பாள். இடபவாகன மேறிய அவன் தன் சிரசில் தூய வெண்மதியைச் சூடியுள்ளான். உலகெலாம் சங்கரிக்கப்பட்ட போது மிகுந்திருக்கும் சுடலைப் பொடியைத் தன் மேனியில் பூசித். தான் மட்டும் மிகுந்திருக்கும் ஆதிகாரணன் அவன். தூய வெண்ணிறு பூசித் தூய வெண்மதி சூடி, வெள்ளை எருதின் மேலேறித் தன் இடப்பாகத்தில் பெண்ணுகிய சக்தியை தரித்

திருக்கும் அவன் என் உள்ளத்தைக் கவர்ந்ததில் அதிசயமென்ன! எல்லா உயிர்களிடத்தும் நிறைந்திருக்கும் அவன் அவர்களுடைய வினைப் போகத்தால் தன்னைக் காட்டாமல் மறைத்துக் கொண்டு இருப்பதால் அவனைக் கள்வன் என்பதில் தவறென்ன? அனைவரையும் படைக்கும் கடவுளாகிய பிரமனுக்கும் முன்பு அருள் செய்தவன். பிரமாபுரத்தில் மேவி நிற்கும் பீடுடைய பெம்மான் இவன். இவன்தானே என்னை இங்ஙனம் செய்தான்," என்றார். இறைவனிடம் தனக்கு என்றுமுள்ள தொடர்பை அறிந்துகொண்ட பிள்ளையார் தங்கு தடையின்றித் தன் நிலையைச் சொல்கிறார்.

"தோடுடைய செவியன், விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே."

பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்றாக அமைந்துள்ள தம் பதிகங்களைத் "தோடுடைய செவியன்" என்ற முதற்பாட்டுடன் ஆரம்பிக்கும் பிள்ளையார் ஓம் என்னும் பிரணவ மந்திரத்துடன் இணைத்து ஆரம்பிக்கும் வல்லமையும் பெருமையும்தான் என்னே! மேலே வரும் பத்துப் பாட்டுக்களிலும் இறைவனின் அழகிய தோற்றத்தையும் அடையாளங்களையும் அவன் தன் உள்ளத்தைக் கவர்ந்த தன்மையையும் அருளிச் செய்தார்.

"முற்றல் ஆமை இளநாகமோடு ஏனம் இவை பூண்டு" என்றும் "நீர் பரந்த நிமிர் புன்சடைமேல் ஓர் நிலா வெண்மதிசூடி." என்றும் போற்றுகிறார். இறைவனின் பிச்சையேற்கும் எளிய கோலம் பிள்ளைப் பிராயத்திலுள்ள அவரை மிகவும் கவர்ந்தது போலும். சகல உலகமும் தன்னுடையதாய் இருக்கும்போது இவன் ஏன் பலி ஏற்கவேண்டும்? நமக்கு எளியனாய்த் தன் திவ்வியக் கோலத்தை மறைத்துக்கொண்டு, நம்மை ஆட்கொண்டு அருளும் பொருட்டேயன்றோ அவ்விதம் வருகிறான்! "வற்றல் ஓடு கலனாப் பலி தேர்ந்து எனதுள்ளம் கவர் கள்வன்" என்றும் "விளங்கு தலை ஓட்டில் உள் மகிழ்ந்து பலி தேரி வந்து எனதுள்ளம் கவர்கள்வன்" என்றும் கூறுகிறார். பலி ஏற்கும் செய்கையை உள் மகிழ்ந்து செய்கிறாராம்.

பிரமாபுரம் மேவிய பெம்மானாகிய இவன், "கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கையால் தொழுதேத்தப் பெற்றம் ஊர்ந்தவன்" என்றும் "ஊர் பரந்த உலகின் முதலாகிய ஓருரிதுவென்னப் பேர் பரந்த பிரமாபுர மேவியவன்" என்றும் போற்றுகிறார். கற்றுணர்ந்த மெய்யடியார் கை தொழவும் அத்தருணமே எருதேறிச் செல்வதற்குத் தயாராக இருக்கின்றானாம். ஊழிக்காலத்திலும் அழியாது இது ஒன்றே நிலைத்திருக்கும் ஊர் என்னும்படி பெயர் பெற்ற ஊர் இவன் வாழும் ஊர்," என்று அருளுகின்றார்.

சிவஞானம் பெற்ற பிள்ளையாரின் பாடல்கள் குழந்தைப் பருவத்திலே பாடப்பெற்றமையால் பொருள், நயம், சொல்லாட்சி எதிலாவது குறைந்திருக்கிறதா? கிடையவே கிடையாது! வேதத்தின் சாரங்களை எல்லாம் ஒன்றுதிரட்டித் தேனினும் இனிய தமிழிலே பண்ணோடும் சேர்த்து ஒருவரும் அதற்கு முற்றிலும் பொருள் காணமுடியாத அத்துணை நுணுக்கத்தோடும் பொருட் செறிவோடும் அமைந்துள்ளன. பண் சுமந்த பாடல்களாகவே அருளப்பெற்றிருக்கும் அப்பாக்கள் சம்பந்தப்பெருமானின் திருவாயினின்றும் எப்படித்தான் புறப்பட்டிருக்குமோ! அத்தீங்குரலின் இனிமைதான் எவ்வண்ணம் இருந்திருக்குமோ!

மொழி வளத்தோடு இசைவளமும் மிகச்சேர்ந்திருக்கும் என்று வரலாறு களினின்றும் அறிய முடிகின்றது. இசையை நாயன்மார்கள் ஒரு வலிமை மிகுந்த ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளார்கள் என்றே தெரி கிறது. தோடுடைய செவியன் இவ்வின்னிசையோடு கூடிய தமிழ் அமுதத்தைப் பருக யாண்டும் ஆவலோடு காத்திருந்தான் என்பதில் என்ன வியப்பு இருக்க முடியும். சம்பந்தப்பெருமான் வாழ்ந்த பொற் காலத்தில் வாழப்பெற்றவர்கள் பெரும் புண்ணியம் பெற்றவர்களாக இருந்திருப்பார்கள். எத்தனை நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் படிக்கப் படிக்கத் தெவிட்டாததும் பாடப்பாட சுவை கூடுவதுமாக உள்ள தேவாரப்பதிகங்கள் அக்காலத்தில் முழு உணர்வோடு சமயாச்சாரியர் கள் வாயிலாக வெளிப்பட்டபோது எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந் திருக்க வேண்டும்! "செத்தவன் பிழைத்தெழுந்தான்" என்றால் ஏன் எழுந்திருக்க மாட்டான்! தலங்கள்தோறும் சென்று ஆங்காங்கு தெய் வத்தின் சாந்நித்தியத்தை ஏற்படுத்தி "பாடல் பெற்ற தலம்" என்ற பெருமையை அவைகளுக்குக் கொடுத்த சைவ சமயாச்சாரிகளான நாயன்மார்களின் பெருமையே பெருமை. இத்தகைய சைவக் குரவர்கள் நால்வரைப் பெற்ற சைவ சமயம் என்றென்றும் போற்றப்படும் என்பது திண்ணம்.

ஐந்தாவது பாடலில் "ஒருமை பெண்மையுடையன்" என்கிறார். ஒரு திருமேனியிலேயே பெண்ணைப் பாதியாய், சமமாக வைத்துக் கொண்டான். ஆணும் பெண்ணும் இரு தத்துவமல்ல ஒன்றேதான் என்பதைக் காட்டினான். பெண்ணிற்குத் தான் அடிமையாகாமலும் பெண்ணைத் தான் அடிமை கொள்ளாமலும் சமமான இடத்தைக் கொடுத் தான். இதை ஏன் உலகோர் கண்டு உய்வடையக்கூடாது? பெண்மை யின் தத்துவமாம் பராசக்தியை, அன்னையின் வடிவிலே-ஆண்டவனின் திருவுருவிலே-கண்டு போற்றி மகிழ்கிறது பால்மனம் மாறாத திருஞான சம்பந்தரின் திருவுள்ளம். அம்மையையும் அப்பனையும் ஒருருவிலேயே கண்டு மகிழ்ந்தார். "சிவபெருமானைப் பற்றிப் பிறர் அருமையாகப் பேச, அவ்வுரையைக் கேட்ட என் உள்ளம் அவன்பாற் சென்றது. அப்பேர்ப்பட்ட அவன், பெருமை பெற்ற பிரமாபுரத்தின் மேவி நிற்கின் றான்" எனவும் கூறுகின்றார்.

"ஒருமை பெண்மையுடையன் சடையன் விடையூரும் இவன் என்ன
அருமையாக உரை செய்ய அமர்ந்து எனதுள்ளம் கவர்கள்வன்
கருமைபெற்ற கடல்கொள்ள மிதந்ததோர் காலம் இதுவென்னப்
பெருமை பெற்ற பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே"

இறைவனைக் கணமும் பிரிந்திருக்கத் தரியேன் என்ற உயர்ந்த நாயக நாயகி பாவத்தை "வெள்வளை சோர என்னுள்ளம் கவர்கள்வன்" என்று கூறுகிறார். சம்பந்தரின் பதிகங்களிலே காணப்படும் கணக்கற்ற அழகிய இயற்கை வருணனைகள் இலக்கியச் சுவைஞர்கள் படித்துப் படித்து இன்புறத்தக்கன.

ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடலில் செருக்கு மிகுந்த இராவணன் இமயத்தைத் தூக்க முயன்று இறைவனால் தண்டிக்கப் பெற்றதையும், பின்னர் இறைவனுக்குகந்த சாமகீதத்தை இசைத்து, இறைவனின் கருணையால் மீண்டும் உய்வு பெற்றதையும் குறிக்கின்றார். தவறு செய்தாலும் அதனை உணர்ந்து மனம் வருந்தும்போது இறைவன் மன்னித்தருளுகிறான் என்பதை இதன் மூலம் எடுத்துரைக்கின்றார். ஒன்ப தாவது பாடலில், ஆணவத்தினால் இறைவனையே அளக்கத் துணிந்த

அரியும் பிரமனும் பன்றியின் உருவத்தையும் பட்சியின் உருவத்தையும் அடைந்து தாழ்வுற்றதை எடுத்தியம்புகிறார். அரிபிரமற்கும் அரிதாகும் அந்த ஆண்டவன், அன்புடன் துதிக்கும் அடியார்க்கு எத்தனை எளியனுகின்றான் என்பது கருத்து. பத்தாவது பாடலில் அறிவற்ற சமணர்களும் புத்தர்களும் நேரிடையே சொல்வதற்குத் துணிவில்லாது புறங்கூறிக் களிக்கின்றனர். அவர்கள் புறங்கூறிப் பழிக்கும்படியாகப் பிச்சை ஏற்றும், யானைத்தோலைப் போர்த்துக் கொண்டு மாயம் செய்தும், பித்தர் போல் திரியும் இவன், என் உள்ளத்தைக் கவர்ந்தானே என்றார். சமண பௌத்த மதங்களை அழிக்க வந்தவராகையால், ஒவ்வொரு பதிகத்திலும் பத்தாவது பாடலில் இவர்களுடைய குற்றங்களைச் சாடுகின்றார்.

பதினோராவது பாடலில் திருக்கடைக்காப்புச் சாத்தி ஒரு நெறிய மனம் வைத்து ஓதுவார் தொல்வினை தீர்வர் என்று, பதிகத்தை ஓதுவதால் ஏற்படக் கூடிய பலனையும் குறிக்கின்றார்.

அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை அலர்மேல்
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே.

ஞானசம்பந்தப்பிள்ளையார் இங்ஙனம் தெய்வத் தமிழ்ப்பாக்களை இசைத்தது கண்டு திருவுளமிரங்கிய தோணியப்பரும் உமையம்மையும் இடபாரூடராகத் தோன்றினர். சம்பந்தர் அவர்களைச் சுட்டிக் காட்டச், சுற்றியிருந்தோர் வியப்பும் பெருமிதமும் கொண்டு "இறைவன் அருள் தான் என்னே" என்று விம்மிதமுற்றனர். சிவபாதவிருதயர் தம் திருமகனுரின் தெய்வப்பெற்றியை உணர்ந்து இரும்பூதுற்று "என்னையாளும் ஈசன் செயல் இதுவோ" என்று உளம் கனிந்து துதித்தார். விண்ணவரும் மண்ணவரும் சிவபெருமான் திருவருள் திறத்தினைக் கண்டு போற்றி மகிழ்ந்து துதித்தனர். பிள்ளையார் அம்மையப்பன் எழுந்தருளியுள்ள ஆலயத்துள் சென்று அடியார்கள் புடைசூழ வழிபட்டுச் சிவானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கியிருந்தார். சீர்காழிப் பெருமக்கள் தாங்கள் செய்த பேறுதான் என்னே என்று வியப்புடன் மகிழ்வுற்று பிள்ளையாரைப் போற்றி வணங்கி இனிதிருந்தனர்.

—: o :—

வருக! இராமேஸ்வரம்

இராமேசுவரம் தீவில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில் மனம் கவரும் புராதன சிற்பக்கலைக் காட்சிகளுடனும், மிகப்பெரிய பிரகாரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. இராமாயண வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ள இத்தலம் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்ருக விளங்குவதுடன், வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் என இந்துக்களுக்குத் தலைசிறந்த இரு பெரிய புண்ணிய தலங்களாகும்.

இத் திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சேவார்த்திகள் வசதியாகத் தங்கவும், முறையாக வழிபடவும், இங்கு முக்கிய மாகக் கருதப்படும் இலக்குமண தீர்த்தம், தனுஷ்கோடி, கந்தமாதன பர்வதம் முதலான இடங்களுக்குப் போவதற்கு வசதியும் இக்கோயில் நிர்வாக அதிகாரியை அணுகுவதன் மூலம் அடையலாம்.

இக்கோயிலில் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் ஒன்றுக்கு ரூ. 10/– வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும், வெள்ளிக் காசும் பெறலாம்.

இக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப் பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேணுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம்,
தமிழ்நாடு.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில்.

இராமாநுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், எம்.ஏ., பி.ஓ.எல்.

(16)

வடுகநம்பியின் குருபக்தி

வடுகநம்பி என்பவர் ஆந்திரதேசத்திலிருந்து வந்து இராமாநுசரை அடிபணிந்தவர். இராமாநுசரையே தெய்வமெனக்கொண்டு தொண்டாற்றியவர். இராமாநுசருடைய திருவடி நிலைகளான பாதரட்சையையே தமது திருவாராதனப் பெருமாளாகக் கொண்டவர். இராமாநுசருக்குப் பால் காய்ச்சிக் கொடுக்கும் தொண்டினையும் மேற்கொண்டிருந்தார். இராமாநுசர் யாத்திரை செல்லுங்காலத்தில் கோயிலுக்குப் போகும்போது, அவருடைய பாதரட்சைகளை வடுகநம்பிகளே போற்றிப் பாதுகாப்பர். ஒரு சமயம் இராமாநுசர் திருவரங்கத்திலிருந்து திருவெள்ளரைக்குச் சென்றார். சுவாமி தரிசனத்துக்காகக் கோயிலுக்குள் செல்ல நினைத்தபொழுது வழக்கம்போல் பாதரட்சையை வடுகநம்பி பெற்றார். அப்பாதரட்சைகளை இராமாநுசரின் திருஆராதனப் பெருமாளாகிய வரதராஜப் பெருமாளுடன் மூட்டையில் ஒன்றாகக் கட்டினார். இதைக் கண்டுவிட்ட இராமாநுசர் அதிர்ச்சி அடைந்து வடுகநம்பியைக் கோபித்துக் கொண்டார். அப்போது வடுகநம்பிகள் அமைதியாக, "உமது தேவராகிய வரதராஜப்பெருமாளைவிட எனது தேவராகிய உமது பாதரட்சைகள் குறைந்தனவோ?" என்று கேட்டார். உடன் வந்த பக்தர்கள் 'இப்படியும் ஒரு பக்தியா?' என்று வடுகநம்பியை வியந்து போற்றினர்.

திருவரங்கம் பெரிய கோயிலில் பெரிய பெருமாளாகிய ஸ்ரீரங்கநாதனை இராமாநுசர் ஒருமுறை சேவிக்கச் சென்றார். அப்பொழுது வடுகநம்பியும் இராமாநுசரோடு கோயிலுக்குச் சென்றிருந்தார். இராமாநுசர் திருவரங்கனின் திருக்கண்ணழகிலே ஈடுபட்டு, வடுகரை நோக்கி "நம்பியே! பெருமாளின் திருக்கண்களைச் சேவியும்.

> "மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள்
> என்னைப் பேதைமை செய்தனவே"

என்ற ஆழ்வார் திருவாக்கின்படி எவ்வளவு அழகாக விளங்குகின்றன! அதோடு பெருமாளுடைய திருப்பவள வாயையும் கவனியும்" என்றெல்லாம் சொல்லி வடுகரை அரங்கன் திருமேனியழகில் ஈடுபடுத்த முயன்றார். ஆனால் வடுகநம்பிகளோ "என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்ற திருப்பாணாழ்வாரின் வாக்கை நினைவூட்டி "இராமாநுசராகிய தேவரீருடைய திருக்கண்ணழகையும், திருப்பவளவாயையும் விடவா அவைகள் அழகுள்ளவை?" என்று கேட்டு எம்பெருமானாராகிய இராமாநுசரின் வடிவழகிலேயே ஈடுபட்டிருந்தார்.

இப்படி பலவாய சீடர்கள் தெய்வமாகத் தொழ, இராமாநுசர் திருவரங்கத்தில் செங்கோல் செலுத்தி ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தையும், விசிட்டாத்துவைதக் கொள்கைகளையும் தழைத்தோங்கச் செய்து வந்தார்.

அண்டர் குலமும் தொண்டர் குலமும் :

ஒருமுறை இராமாநுசர் தம்முடைய முக்கிய சீடர்களான முதலியாண்டானையும், கூரத்தாழ்வானையும் அழைத்துக் கொண்டு காவிரியில் நீராடச் சென்றார். போகும்போது ஆண்டான், ஆழ்வான் ஆகிய இரு சீடருடைய கைகளைப் பற்றிக்கொண்டு சென்றார். நீராடி வரும்போது இவ்விருவர் கைகளின்மீதும் ஈரத்துணியைப் போட்டுப் பிடித்துக் கொண்டு வந்தார். இராமாநுசரைப் போலவே இவ்விருவரும் பார்ப்பன வகுப்பில் உயர்குடியில் பிறந்தவர்கள் தான். ஆனாலும் அவர்கள் கைகளின் மேலும் ஈரத்துணியிட்டுப் பிடித்து வந்தவர், தன் எதிரே வந்து தொழுது நின்ற உறங்காவில்லி என்ற வேடர் குலத்தோன்றலின் தோள்மேல் தம் கையை வைத்து நடந்து வந்தார். இச்செயல் முதலியாண்டானுக்கோ, கூரத்தாழ்வானுக்கோ அதிர்ச்சியைத் தரவில்லை. பெரும் புலவர்களாகவும் பெருஞ் செல்வர்களாகவுமிருந்த அவர்கள் இராமாநுசரின் திருவுள்ளக் கருத்தை நன்கு புரிந்துகொண்டவர்கள். ஆனால் இக்காட்சியைக் கண்ட மற்ற போலித் துறவிகள் மனம் வெதும்பினர். 'முதலியாண்டான் பார்ப்பன வகுப்பினர் மட்டுமல்லர். இராமாநுசரின் மருமகரும் அல்லவா? கூரத்தாழ்வான் எவ்வளவு பெரிய ஞானி. இவர்களையெல்லாம் விடவா இந்தக் கீழ்க்குலத்தில் தோன்றிய காட்டு வேடன் உயர்ந்து விட்டான். இராமாநுசர் ஏன் இப்படியெல்லாம் வரம்பு முறைகளை மாற்றி நம்மைச் சோதிக்கிறார்?' என்று தங்களுக்குள் பேசியும், மறைவாகப் பழித்தும் வந்தனர். இராமாநுசர் இவர்களுக்குப் பாடம் கற்பிக்க ஒரு சூழ்ச்சி செய்தார்.

வில்லி தம்பதிகளின் பக்தி :

உறங்காவில்லியும் அவன் மனைவியான பொன்னாச்சியும் இராமாநுசரிடம் மிகவும் பக்தி பூண்டவர்கள். இவர்கள் அடியார்களுக்குத் தொண்டு செய்வதையே கடமையாகக் கருதி வாழ்பவர்கள். இவர்கள் தொண்டர் குலம் தவிர வேறு எந்தக் குலத்தையும் சேர்ந்தவராகத் தம்மைக் கருதுவதில்லை. நான், எனது என்ற அகந்தைகளை விட்டவர். எனவே இவர்களுடைய தொண்டுள்ளத்தை மற்றவர்களுக்கு உணர்த்த வேண்டுமென்று இராமாநுசர் திட்டமிட்டார்.

ஒருநாள் இராமாநுசர் தம்முடைய சீடர்களில் ஒருவரைக் கூப்பிட்டு மடத்தில் உலர்த்தப்பட்டிருக்கும் துறவிகளின் காவியாடைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முழத்தைக் கிழித்துக் கொண்டுவரும்படி கட்டளையிட்டார். மடத்தில் அப்பொழுது உணவு உட்கொள்ளும் நேரமாதலால் எல்லாத் துறவிகளும், மற்ற சீடர்களும் உணவுச்சாலையில் மூழ்கியிருந்தனர். உணவு முடித்த பிறகு துறவிகள் தங்களுடைய ஈர ஆடைகள் கிழிக்கப்பட்டிருப்பதைக் கண்டார்கள். யார் இப்படிச் செய்தது என்று பலவாறு நித்தித்தார்கள். குடியே முழுகிவிட்டது போலக் கூப்பாடு போட்டார்கள். தங்கள் தலைவராகிய இராமாநுசரிடம் பெரிய அளவில் இதைப் பற்றிப் புகார் கூறினார்கள்.

அவர்களுடைய புகாரைக் கேட்ட இராமாநுசர் புன்சிரிப்போடு, "சீடர்களே இந்த ஆடைகளைக் கிழித்துச் சென்ற கள்வன், கொஞ்சம் கருணையுடையவனாகவும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் எல்லா

ஆடைகளேயுமல்லவா எடுத்துச் சென்றிருப்பான். இது ஏதோ ஒரு நோக்கத்தோடு செய்யப்பட்ட செயலாகும். பொறுத்திருந்து பார்ப் போம். அமைதியாக இருங்கள்" என்று ஆறுதல் கூறினர். ஆயினும் துறவிகள் சமாதானம் அடையவில்லை. இதைக் கண்டுபிடித்துக் குற்ற வாளியைத் தண்டித்தே தீர வேண்டும் என்று வாதிட்டனர்.

அப்பொழுது இராமாநுசர் "நம்முடைய மடத்தில் அந்நியர் யாரும் வருவதில்லை. ஸ்ரீவைணவர்களே வருகிறார்கள். அவர்களில் யாரேனும் ஒருவர் செய்திருந்தால் என்ன செய்வது? இதனால் பெரிய நஷ்டம் ஒன்றும் இல்லையே" என்று கேட்டார். அதற்குத் துறவிகள் "ஸ்ரீவைணவர்களானாலும் வேறு யாராக இருந்தாலும் அவர்களைக் கண்டுபிடித்து, தண்டிப்பதுடன் எங்களுக்குப் புதிய ஆடையையும் வாங்கித்தர வேண்டும்" என்று ஆரவாரம் செய்தனர்.

உடனே இராமாநுசர் அவர்களுக்குப் புத்தி புகட்ட ஒரு நாடகத்தை நடத்தினர். அதாவது இரண்டு உண்மைச் சீடர்களை அழைத்து "இப் போலித் துறவிகளுக்குப் பாடம் கற்பிக்க விரும்புகிறேன். நீங்கள் யாருக்கும் தெரியாமல் வில்லிதாசர்களின் வீட்டிற்குச் சென்று பொன்னாச்சி உறங்கிக் கொண்டிருக்கும்போது அவளுடைய நகைகளை யெல்லாம் அவள் உடம்பிலிருந்து எப்படியாவது கழற்றிக் கொண்டு வாருங்கள்" என்றார். "அதோடு இன்று இரவு நம்மிடத்தில் வில்லி அதிகநேரம் இருப்பார். நீங்கள் உங்கள் வேலையைச் செவ்வனே செய்து வாருங்கள்" என்றார்.

பொன்னாச்சி தன் கணவர் வரும் நேரமாகையால் கதவைத் தாளிடா மல் சாத்திவைத்திருந்தாள். உள்ளே சிறிது படுத்துக் கண்வளர்ந்தாள். அந்தச் சமயத்தில் இராமாநுசரால் அனுப்பப்பட்ட சீடர்கள் மெதுவாகக் கதவைத் திறந்து உள்ளே வந்தனர். அப்பொழுது பொன்னாச்சி விழித்துக் கொண்டாள். இருப்பினும் திருமண்காப்பு பொலிய இரு வைணவர்கள் சத்தம் செய்யாமல் மெதுவாகத் தன்னை நோக்கி வருவதை அறிந்த அவள், உறங்குவதுபோலவே நடித்து என்ன நடக்கிறது என்பதை அறிய விரும்பினாள்.

வந்த வைணவர்கள் பொன்னாச்சி ஒருபக்கமாகச் சாய்ந்து படுத்திருப் பதைக் கண்டார்கள். மேல் பக்கமாகக் காதிலிருந்த ஒரு ஓலையையும் மூக்கு, மற்றும் கழுத்தில் அணிந்திருந்த ஆபரணங்களையும் கழற்றிக் கொண்டார்கள். இதற்குள் பொன்னாச்சி 'இவர்களுக்கு எவ்வளவு வறுமையோ? இந்தப் பக்கத்து அணிகளோடு இவர்கள் சென்றுவிடப் போகிறார்களே ; மறுபக்கத்து அணிகளையும் இவர்கள் கழற்றிக் கொள் வதற்கு ஏற்ப, நான் மெதுவாகத் திரும்பிப்படுப்பதே நல்லது'என்று எண்ணியவளாய் புரண்டு படுப்பவள்போல் மற்றொரு புறம் திரும்பினாள். ஆனால் அங்கு வந்த வைணவர்களோ 'இவள் விழித்துக் கொண்டாள். இனி இங்கு இருப்பது ஆபத்து' என்று கருதி ஓடிவிட்டனர்.

அவ்விருவைணவரும் இராமாநுசரை மடத்தில் கண்டு தொழுதனர். இராமாநுசரும் உறங்காவில்லியை வீட்டுக்குச் செல்லும்படி கட்டளை யிட்டார். ஆனால் இராமாநுசர் அந்த இரண்டு வைணவர்களையும் வில்லிதாசருக்குத் தெரியாமல் அவரைப் பின்தொடர்ந்து அவர் வீட்டுக்குச் செல்லும்படி பணித்தார். "அங்கு வில்லிக்கும் அவர் மனைவி யான பொன்னாச்சிக்கும் நடக்கும் உரையாடல்களை மறைந்திருந்து கேட்டுவந்து அப்படியே சொல்லுங்கள்' என்றும் கட்டளையிட்டார். அவர்களும் சரி என்று சொல்லிப் புறப்பட்டனர்.

உறங்காவில்லியைப் பொன்னாச்சி எதிர்கொண்டழைத்தாள். உபசாரம் செய்தாள். அப்பொழுது மனைவியைக் கண்ட உறங்காவில்லி "ஒரு பக்கத்து நகைகள் காணவில்லையே! ஏன்?" என்று கேட்டார். அவளும் நடந்ததைச் சொன்னாள். "அந்தத் தொண்டர்களுக்கு எவ்வளவு வறுமையோ! பாவம்; என் நகையைக் கவர்ந்தார்கள். ஆனால் அதை நான் திருட்டாகக் கருதவில்லை. அவர்கள் வறுமை நீங்க மற்றொரு புறத்து நகைகளையும் கழற்றிக் கொள்ளட்டுமே என்று திரும்பிப்படுத்தேன். ஆனால் அவர்கள் ஏனோ நான் விழித்துக் கொண்டதாகக் கருதி உடனே ஓடிப்போய் விட்டார்கள்" என்று கூறினாள். இதைக்கேட்ட உறங்காவில்லி மனைவியை மிகவும் கோபித்துக்கொண்டார். பொருள்களைப் பறிகொடுத்ததால் வந்த கோபமல்ல அது. அந்தப் பாகவதர்களைப் பயமுறுத்திவிட்டாளே என்பதுதான் கோபம். எப்படியும் இவள் அசையாமல் படுத்திருந்தால் அந்த வைணவர்கள் தங்கள் வறுமை நீங்க, இந்த வீட்டின் வேறு செல்வங்களையும் எடுத்துப் போயிருப்பார்களே என்றுதான் எண்ணினார். இந்த வில்லி தம்பதிகளுடைய உரையாடல்களை மறைந்திருந்து கேட்ட வைணவர்கள் மடத்திற்குச் சென்று அப்படியே இராமாநுசரிடம் கூறிவிட்டனர்.

இரவு வெகு நேரமாகியதால் இராமாநுசர் அவர்களை உறங்குவதற்கு அனுப்பிவிட்டுத் தானும் ஓய்வெடுத்துக் கொண்டார். பொழுது விடிந்தவுடன் இராமாநுசர் காலை அனுட்டானங்களை முடித்துக்கொண்டு உபந்நியாச மண்டபத்தில் சீடர்களைக் கூட்டினார். முன்னாள் இரவு வில்லிதம்பதிகளின் வீட்டில் களவு நடந்தது பற்றியும், அப்பொழுது அவர்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு பிறர்க்குதவ முயன்ற உரையாடல்களைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். "தங்களுடைய ஆடையில் ஒரு முழம் கிழிந்து போனதற்காக வருந்தி, ஆற்றாது அரற்றிய துறவிகள் எங்கே? தங்கள் நகைகளையெல்லாம் அடியார்களுக்கு அளிக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தால் போட்டிபோட்ட தம்பதிகள் எங்கே?" என்று கேட்டார். மடத்தில் வாழ்ந்த போலித் துறவிகள் நாணத்தால் தலைகவிழ்ந்து நாளாவட்டத்தில் நல்ல துறவிகளாய் திருந்தினர்.

பாகவதர்களுக்கு உதவ முடியவில்லையே என்ற காரணத்தால் வில்லி பொன்னாச்சியைக் கோபித்துக் கொண்டார். அவள் திரும்பிப்படுத்ததற்கு ஏற்ற காரணத்தைச் சொல்லியும் அவர் நம்பாமல் நகைப்பற்றின் காரணமாகவும், தன்னுடைய நகையை அளிக்கிறோம் என்ற ஆணவப் பற்றின் காரணமாகவும் அவள் அவ்வாறு நடந்துகொண்டதாகவே கருதினார். உடனே வீட்டை விட்டு வெளியேறி இராமாநுசரிடம் வந்து நடந்ததை விவரித்தார். உண்மையில் தொண்டர்களிடம் வில்லிக்கும், பொன்னாச்சிக்கும் மிகுந்த பக்தியிருந்தது என்பதையறிந்த இராமாநுசர் அவர்களைச் சமாதானப்படுத்தி இருவரையும் மடத்திலேயே தங்கி வழிபாடு செய்யக் கட்டளையிட்டார். முன்பு வில்லிதம்பதிகளின் உடலுறவை மட்டுமே ஏற்படுத்திய திருமண வாழ்வு, இன்று இராமாநுசருடைய மடத்தில் ஆன்ம உறவையும் உறுதிப்படுத்தி வளமாக்கியது.

இவ்விதம் இராமாநுசப் பெருவெள்ளம் சாதியால் உயர்வு தாழ்வு பாராமல் பார்ப்பன குலத்தில் தோன்றிய கல்விமான்களான முதலியாண்டான், கூரத்தாழ்வான் போன்றவர்களைக் காட்டிலும், சாதியால் வேடர் குலத்தில் தோன்றிய வில்லி-பொன்னாச்சி என்கிற தம்பதிகளிடத்திலும் பாய்ந்து, ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயப்பயிரைச் செழிப்பாக வளர்த்தது.

(தொடரும்)

"வன்தொண்டன் என்பதோர் வாழ்வு"

டாக்டர் வித்துவான் திரு. வை. இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச் டி.,

முன் இதழ்த் தொடர்ச்சி

சுந்தரர் உலகின் எப்பகுதியிலும் கேள்விப்பட்டும் இராத புதியதொரு வழக்கைக் கொண்டுவந்த கிழவேதியரைத் துரத்திச் சென்று, வளைத்துப் பிடித்து, ஓலையைப் பிடுங்கிக் கிழித்து எறிந்து விடுகிறார்.

சுந்தரர் வேதியரைத் துரத்திச் சென்றது, ஓலையைப் பிடுங்கியது, கிழித்துப் போட்டது ஆகியவை வன்செயல்களே. ஓலையில் என்ன எழுதப் பெற்றிருக்கிறது? எனப் பிரித்துப் படித்துப் பார்க்கவில்லை சுந்தரர். சுந்தரர் செய்த இச்செயல் அறிஞர் பெருமக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய செயலாகுமா?

இல்பொருளுக்கு உலகின் எப்பகுதியிலும் ஆதாரம் இருக்க முடியாது. 'குதிரைக் கொம்பு' என்றும் இல்லாத பொருள். அதனை உள்பொருள் என்று சாதிக்கும் ஆதாரம் எங்கும் இருக்க முடியாது. குதிரைக் கொம்பு உள்பொருளே என்று சாதிக்கும் ஆதாரம் ஒன்று உண்டு என்று சொன்னால் அதுவும் இல்பொருளாகத்தான்–பிழையுடைய பொருளாகத் தான் இருக்க முடியும்.

இல்பொருளைப் போன்றதே இல்லாத செய்தியும். முற்றிலும் பொய் யான ஒரு செய்தியை எந்த ஒரு பொருள் தாங்கிக்கொண்டிருக்கிறதோ அப்பொருள் பொய்ப்பொருளே. அதனை நாட்டில் நிலவவிடாது அழிக்க வேண்டுவதும் ஒரு அறத்தாறு என எண்ணுகிறார் சுந்தரர். அதனாலேயே அவ்வோலையைப் படித்துப் பாராமலே கிழித்து எறிந்து விடுகிறார். இதனை விளக்க ஒரு சான்று உண்டு.

மதுரையம்பதியில் திருஞானசம்பந்தரும் சமணர்களும் அனல் வாதம், புனல் வாதங்களில் கலந்து கொள்கின்றனர். அனலும் புனலும் இயற்கைகள். தமக்கென அமைக்கப்பெற்ற பண்புகளிலிருந்து மாறு தலை. தம்மிடம் போடப்பெற்ற ஓலைகளை அவைகள் நியதிக்குட்பட்ட வகையில் அழிக்கவோ ஆக்கவோ செய்யும் இயல்புடையவை. அவைகள் தம்மிடம் போடப்பெற்ற ஓலைகளை ஆக்கித்தரும் முறை விந்தையானது.

திருஞானசம்பந்தர் புதிய ஓலையை எடுத்து எதையும் எழுதவில்லை. தலங்கள்தோறும் அவ்வப்போது சென்று பாடும் பதிகங்களைத் தொகுத்து வைக்கும் ஓலைக் கட்டினை எடுத்து, 'எங்கள் நாதனே பரம் பொருள்' என்று தொழுது, தம் முடிமிசை வைத்து வணங்கி, அதன் காப்பு நாண் அவிழ்த்தார்.

சிவமே பரம்பொருள் என்று தாம் முன்னர்ப் பன்முறையும் தெரிவித்த திருப்பதிக முறையைத் தொழுது, தாமே தம்முடைய திருநீற்று வளமை கெழுமிய கைகளால் அவிழ்த்துத் திரும்பியதும் நேர்நின்றது 'போகமார்த்த பூண்முலையாள்' என்று தொடங்கும் திருநள்ளாற்றுத் திருப்பதிகம்,

அத்திருப்பதிகத்தை வணங்கி, அதனால் சிறப்பிக்கப்பெறும் திருநள்ளாற்றுப் பெருமானை உள்ளத்தால் வழுத்தி, அப்பதிகம் தாங்கிய ஏடுகளைக் கழற்றி. 'தளரிள வளரொளி' என்ற பதிகம் பாடித் துதித்து, அதனைத் தீயினில் இட்டார்.

சமணர்கள் தங்கள் சமய உண்மையை எழுதிய ஏட்டை, உய்யுமோ இது என உறும் கவலையாம் உணர்வால் வருந்தும் நெஞ்சினராகி நடுங்கி நின்று அத்தீயில் இட்டார்கள்.

திருஞானசம்பந்தர் இட்ட ஏட்டினைச் செந்தீயானது எரித்துச் சாம்பலாக ஆக்காமல், விட்டு விட்டாலே வழக்கில் வெற்றிதான். நெருப்பானது கொழுந்துவிட்டெரிந்தது உண்மை. போடப்பெற்ற ஓலை அப்படியே இருந்துவிட்டாலே போதுமானது. ஆனால் குறைபாடு இல்லாமல் இருந்ததைக் கண்டவுடனேயே எல்லாரும் அதிசயித்தார்கள். கையிலெடுத்துப் பார்த்தபோது அது முன்னை இருந்ததைவிட, பசுமையும் புதுமையும் அமைய இருந்தது.

சமணர்கள் போட்ட ஏடு எரிந்தது. ஓலையைத் தேடுவற்காகத் தண்ணீர் கொண்டு நெருப்பை அணைத்தார்கள். கருகிய சாம்பல் இருந்தது. சமணர்கள் அங்கே திரண்டிருந்த சாம்பலைக் கையினாற் பிசைந்து தூற்றிப் பார்ப்பதைக் கண்ட மன்னன் சிரித்தான்.

சமணர்கள் எழுதிய தத்துவம் என்ன? "கண்டு முட்டு; கேட்டு முட்டு" என்பதே. கண்டால் தீட்டு; கேட்டால் தீட்டு என்பதே அதன் பொருள். அருகன் சொன்னவை தவிர, பிறவற்றைக் காணலோ கேட்பதோ கூடாது; நிகழுமாயின் அவை தூய்மையின்மை என்று கருதப் பெறவேண்டும். இதைக் குறிக்கும் தொடரே "கண்டு முட்டு; கேட்டு முட்டு" என்பது.

இத்தகைய கருத்து, தத்துவ உலகிற்கு ஒத்துக்கொள்ளக் கூடிய கருத்தும் அன்று. இதை அழித்தது மட்டும் அன்று; இதைத் தாங்கிய ஓலையையும் எரித்தது.

ஓலை எரிந்து அழிந்தது நெருப்பின் இயற்கைச் செயலால். இதனால் தத்துவம் முறையுடையது என்பது உண்மை வாதமாக அமையாது. ஓலையை எரித்தது நெருப்பின் இயற்கை. ஓலையின் சாம்பல் எஞ்சியிருக்க வேண்டும். சமணர்கள் தேடிப்பார்த்தது எரிந்த ஓலையின் சாம்பல். பொய்யான தத்துவத்தை அழித்தது மட்டுமன்று; அதைத் தாங்கிய ஏட்டைக்கூட முழுமையாக அழித்துவிட்டது நெருப்பு. சாம்பல் கூட இல்லாத அதை முழுமையாக அழித்து விட்டது.

இரண்டாவது நடைபெற்ற புனல்வாதத்தில் சமணர்கள் 'அத்தி நாத்தி' என்ற தத்துவத்தை எழுதிப் போடுகிறார்கள். இரண்டாம் முறையாக நடைபெற்ற இவ்வாதத்தில் சமணர்கள் தம் தத்துவக் கொள்கையையே எழுதி அமைக்கிறார்கள். அஸ்தி-இருப்பது; நாஸ்தி-இல்லாதது; அஸ்தி நாஸ்தி = அத்திநாத்தி-இருப்பதும் இல்லாததும். வெவ்வேறு விளக்கங்கள் கூறலாம் ஆயினும், நாம் காணும் எந்த ஒரு பொருளும் ஒருவகையில் இருக்கும் பொருள் ஒருவகையில் இல்லாப்பொருள்.

இத்தத்துவம் பிழைபட்ட தத்துவம் அன்று, ஆனால் முழு உண்மைத் தத்துவமும் அன்று. இத்தத்துவம் எழுதப்பெற்ற ஓலை தண்ணீரை எதிர்த்துச் செல்லவில்லை என்பது உண்மை. காரணம் அதில் எழுதப் பெற்ற தத்துவம் காலக் கோட்பாடுகளைக் கடந்து வாழும் தத்துவம் அன்று. கால வெள்ளத்தில் எதிர்த்து நிற்கக் கூடிய தத்துவம் அன்று. காலத்தோடு இணைந்து மறைந்து விடும் தன்மை வாய்ந்த தத்துவம். எனவே சமணர்கள் எழுதிப்போட்ட தத்துவ ஓலை தண்ணீர் சென்ற வழியே சென்றது. பின்னர் கடலைச் சார்ந்தது. "காணவும் எய்தா வண்ணம் கடலின் மேற் செல்லும் ஏடு நாணிலா அமணர் தம்மை நட்டாற்றில் விட்டுப் போக" என்ற அளவே இயம்புகிறார் சேக்கிழார். சாம்பலும் எஞ்சாத அளவுக்கு அழிந்து போவதற்குக் காரணமாக இருந்த ஓலை போலன்றி, தத்துவம் தவறு என்று சுட்டப்படுவதற்கும், காலவெள்ளத்தில் எதிர்த்துச் செல்லும் தத்துவம் அன்று, கால வெள்ளத்தால் மறைக்கப்பெறும் தத்துவம் என்று வலியுறுத்தப்படுவ தற்கும் சான்றாக 'அத்தி நாத்தி' என்று எழுதப்பெற்ற ஓலை காணப் பெறவில்லை என்பதைத்தவிர அழிக்கப்பெற்றது என்பதாகக் கொள்ள முடியாது. சமணர்கள் முயற்சி செய்திருந்தால் தேடி இந்த ஓலையை எடுத்திருக்க முடியும்.

எனவே, தத்துவம் தவறு என்றால், அதை ஏற்றிருக்கும் சாதனமும் தவறு என்பதே முடிவு.

சாம்பலும் இல்லாத நிலையில் எரித்த தீயின் செயலுக்கும் ஓலையை முழுமையாக அழிக்காமல் தத்துவம் தவறு என்று மெய்ப்பித்த தண்ணீ ரின் செயலுக்கும் அமைந்த அடிப்படையை இங்கே நோக்குதல் வேண்டும்.

இவ்வரலாற்றையும் வாதத்தின் போக்கையும் நன்றாக உணர்ந்தவ சுந்தரர்.

கிழவேதியர் கொண்டுவந்த வழக்கோ பிழைபட்ட வழக்கு. சமணர் களின் 'அத்திநாத்தி' என்ற தத்துவம்போல, சிலகாலம் உண்மை என இருந்து, காலவெள்ளத்தால் மறைக்கப்பட்டு விட்ட தத்துவம் போன்ற தன்று இவ்வழக்கு. எக்காலத்திலும் இல்லாத வழக்கு; பிழைநெறி வழக்கு. அதனாலேயே இவ்வழக்கை இறுதியில் அவர் முடிவு கட்டிக் கூறும்போது, மனத்தினால் உணர்தற்கு எட்டா மாயை என்று கூறி விடுகின்றார்.

ஓலையைப் பிடுங்கியதும் படிக்காமல் கிழித்து எறிந்து விடுகின்றார். 'கண்டு முட்டு, கேட்டு முட்டு' என்ற தத்துவத்தை எழுதப் பெற்ற ஓலையை நெருப்பு என்ன செய்ததோ அதே செயலைத்தான் சுந்தரர் இங்கேயும் செய்தார். வழக்கில் ஓரளவு உண்மை இருந்தால் 'அத்தி நாத்தி' என்பதுபோல, வாதம் செய்து தோற்கும் அளவுக்கு அந்த ஓலையை வாழவிடலாம் என்று, வைகையாற்றுத் தண்ணீர் மேற்கொண்ட செயலைச் சுந்தரரும் செய்திருப்பார். இதுவே சுந்தரர் செயலின் கோட் பாடு.

கிழவேதியரைத் தொடர்ந்து ஓடி, ஆவணத்தைப் பிடுங்கியதும், கிழித்துப் போட்டதும் வன்மைச் செயல்கள் என்ற வாதம் எழுகிறது.

இவ்விரு வன்செயல்களையும் தம் வழக்குக்குச் சாதகமானவை என்று கூறிவிடுகிறார் கிழவேதியர். இனி ஓலையே தேவையில்லை என்று முடிவு செய்து விடுகிறார்.

"அறத்தாறு இன்றி வன்திறல் செய்வது, என் கையில் ஆவணம் வலிய வாங்கி நின்று இவன் கிழித்தது" என்ற இரண்டாலும் இவன் அடிமை என்பதை உறுதிப்படுத்தி விட்டான். வன்திறல் செய்து என்னைப் பிடித்தவன், என் கையில் உள்ள ஓலையைப் பிடுங்கியதுவரை சரியே. கைப்பற்றிய ஓலையில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்க்க வேண்டும். அவ்வாறின்றிக் கிழித்துப் போட்டதே என் வழக்கை வெற்றியாக்கியது என்பது கிழவேதியரின் வாதம்.

திருவெண்ணெய் நல்லூர்ச் சபைமுன் கிழவேதியர் மூலஓலையைக் காட்டித் தம் வழக்கை நிலைநாட்டி விடுகிறார். 'மறையவர் அடிமை ஆதல் இந்த மாநிலத்தில் இல்லை; என் சொன்னாய் ஐயா" என்று கேட்ட சபையோருக்கு, தசையெலாம் ஒடுங்க மூத்த கிழவேதியன் வழக்கினைச் சாரச் சொல்லி வெற்றியை வேட்டு நிற்கிறான். அப்போது அவையோர் சுந்தரரை, "நும் கருத்து என்ன?" என்று கேட்டனர்.

"அனைத்து நூல் உணர்ந்தீர்! என்னை ஆதிசைவன் என்று அறிவீர்கள்; தனக்கு வேறு அடிமை என்று இவ்வந்தணன் சாதித்தானேல், அது மனத்தினால் உணர்தற்கு எட்டா மாயை; நான் என்ன சொல்ல முடியும்; என்னால் தெளிய முடியாதது" என்று திட்டவட்டமாகக் கூறி விடுகிறார். இவ்வாறு கூறும் சுந்தரரைச் சேக்கிழார் "எண்ணம் மிக்கான்" என்று அறிமுகப்படுத்துகிறார்.

தான் (சுந்தரர்) செய்த வன்செயல்களைத் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டு, 'ஓலையைக் கிழித்ததே எனக்கு வெற்றி' என்று வழக்கினைச் சாரச் சொல்லும் திறமையைச் சுந்தரரே வியந்து பாராட்டுகின்றார். பொய்யான வழக்குக்களையே வழக்கு மன்றத்தில் நிறுத்தி மெய்யாக ஆக்கிக் காட்டுவதில் நீண்ட நாட் பயிற்சியுடையவன் போலும் என்ற பாராட்டுரையை நம்பியாரூரர் வாயாலேயே பெற்று விடுகிறார் கிழவேதியர். "பழைய மன்றாடி போலும்" என்பது சுந்தரர் வாக்கு. ஆடலரசன் என்பதை உளங்கொள வைத்தார்.

இதுகாறும் தெளிவுறுத்தப்பெற்ற வகையில், 'வன்தொண்டன்' என்ற பெயர் வருவதற்குக் காரணம் "சபைமுன் வன்மைகள் பேசியதே" என்பதைச் சுந்தரரே கூறியிருப்பினும், வழக்குத் தொடங்கிய இடமாகிய புத்தூர் மணவறை அரங்கை நாம் சபை என ஒப்ப முடியாது ஆயினும்' பலருக்கு முன் சொல்லப் பெற்றது ஆதலின் 'சபை' என்று சொல்லப் பெற்றதாக ஒப்புக்கொள்வோமாயினும், அங்கே வன்மைகள் செய்தார் என்பதை ஒப்பலாம். 'வன்மைகள் பேசினர்' என்பது எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பெறும்? என்ற கருத்துக்கள் விளக்கப் பெற்றன.

(தொடரும்)

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் புராணம்

கொற்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலை ஆதீனம் ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய பதவுரையும்

பிரதி செய்தவர் : சேக்கிழார்தாசன் இராமசேஷன்

தாளுடைய திருச்சிலம்பு புலம்பநடம் புரியுந்
தன்மையர னுக்கிசைந்த பேர்வழியி னுளு
மாளுடைய பிள்ளையா ரவதரித்த நாளு
மவரழுது திருஞான மமுதுசெய்த நாளுஞ்
சூளுடையா திரைநாளாஞ் சித்திரையா திரைநா
டொடங்கியெதி ராமாண்டு சித்திரையா திரையி
னுளுடைய கதைமுடிப்ப மெனக்குன்றை வேந்தர்
நடத்தவனை வருமிருந்து கேட்டனர்நா டோறும். 80

(இ-ள்): தாளுடைய திருச்சிலம்பு புலம்ப-திருவடிகளிற் பொருந்திய சிலம்பானது சத்திக்க; நடம்புரியுந் தன்மை யரனுக்கிசைந்த பேர்வழியினுளும்-நடனஞ் செய்யும் நடேசப்பிரானது திருநாமத்துக்குரிய திருநாளும்; ஆளுடைய பிள்ளையாரவதரித்த நாளும்-திருஞானசம்பந்த சுவாமிகள் திருவவதாரஞ் செய்த திருநாளும்; அவரழுது திருஞான மமுது செய்த நாளும்-அவர் அழுது ஞானப்பாலுண்டருளிய திருநாளும்; சூளுடையாதிரை நாளாம்-பெருமை பொருந்திய திருவாதிரைத் திருநாளாம் ஆதலால்; சித்திரை யாதிரை நாடொடங்கி-நிகழுஞ் சித்திரை மாதந் திருவாதிரைத் திருநாளில் தொடங்கி; எதிராமாண்டு சித்திரை யாதிரையினுள்-மறுவருடம் சித்திரை மாதம் திருவாதிரைத் திருநாளில்; உடைய கதை முடிப்பமென-இப்புராணத்தை நிறைவேற்றுவோமென்று; குன்றைவேந்தர் நடத்த-சேக்கிழார் நாயனுர் புராணத்தை அரங்கேற்றல் செய்ய; அனைவருமிருந்து கேட்டனர் நாடோறும்-அடியார்கள் யாவரும் மிகுந்த பக்தியுடனிருந்து நாடோறுங் கேட்டுக் கொண்டு வந்தனர். (எ-று).

சிறப்புடையர் மூவர்முத லிகடிருவாய் மலர்ந்த
திருநெறிய தமிழ்மூலர் திருமந்திரமாலை
யறப்பயனுங் காரைக்காற் பேயிரட்டை மாலை
யந்தாதி மூத்தபதி கங்கழறிற் றறிவார்
மறப்பரிய பொன்வண்ணத் தந்தாதி திருமும்
மணிக்கோவை தெய்வவுலா வையடிகள் வெண்பா
வுறுப்பாகத் திருவிருத்த முடலாகப் பொருட்கோ
ளுயிராக நாலடியா னடந்ததுல கெல்லாம். 81

(இ-ள்): சிறப்புடைய மூவர் முதலிக டிருவாய் மலர்ந்த-புகழையுடைய திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய மூவர் முதலிகள் திருவாய் மலர்ந்தருளிய; திருநெறிய தமிழ்-திருநெறித்தமிழ் வேதமாகிய திரு

முறைகள் ஏழும்; மூலர் திருமந்திரமாலை-திருமூலர் திருமந்திரமாலை யொன்றும்; அறப்பயனுங் காரைக்காற் பேயிரட்டைமாலை-தருமத்தின் பயனாகிய காரைக்காலம்மையார் அருளிச் செய்த இரட்டை மணிமாலை யொன்றும்; அந்தாதி மூத்தபதிகம்-அற்புதத் திருவந்தாதி ஒன்றும் மூத்த திருப்பதிகம் இரண்டும் ஆக நான்கு பிரபந்தங்களும்; கழற்றிற் றறிவார்-சேரமான் பெருமாணாயனார் திருவாய் மலர்ந்தருளிய; மறப்பரிய பொன்வண்ணத்தந்தாதி-மறத்தற்கரிய பொன்வண்ணத் தந்தாதியொன்றும்; திருமும்மணிக்கோவை-திருவாரூர் மும்மணிக் கோவையொன்றும்; தெய்வவுலா-ஆதியுலா ஒன்றும் ஆகிய மூன்று பிரபந்தமும்; ஐயடிகள் வெண்பா-ஐயடிகள் காடவர்கோன் திருவாய் மலர்ந்தருளிய முத்தித்திருவெண்பா வென்னும் பிரபந்தம் ஒன்றும் ஆகிய இவைகள்; உறுப்பாக-அவயவங்களாகவும்; திருவிருத்த முடலாக-திருவிருத்தங்கள் சரீரமாகவும்; பொருட்கோளுயிராக-அவற்றின் பொருள்கோள் ஆன்மாவாகவும்; நாலடியானடந்ததுல கெல்லாம்-நாலடியால் உலகெலாமென்னும் அடியுடைய பிரபந்தம் நடந்தது. (எ-று).

மேற்கூறிய திருமுறைகளில் ஆளுடைய பிள்ளையார் முதலாயினர் சரிதம் விளக்குதற்குக் கருவியாய்த் திருப்பதிகங்கள் ஆங்காங்கு நிற்றலில் உறுப்பாயென்றும்; அவற்றின் பொருள்கள் இப்புராணத்துள் அமைக்கப் படுதலின் உயிராயென்றுங் கூறினர். அவற்றின் பொருள்கள் அமைக்கப் படுதல் ஆளுடைய பிள்ளையார் புராணத்துத் தோடுடைய செவியன் என்னும் திருப்பதிகத்திற்குச் சம்பந்தம் அமைத்திருத்தலும் திருமுகப் பாசுரத்திற்குப் பொருள் கூறியிருத்தலும் முதலியன. ஏனையவும் இவ்வாறே கொள்க.

அன்றுமுத னாடோறு நாடோறு மண்ண
லடியரள விறந்தபெயர் வந்தவர்க ளெல்லாஞ்
சென்றுறையத் திருமடங்க டிருமடங்கடோறுந்
திருவிளக்கங் கவர்சாத்த வுள்ளுடைமேற்போர்வை
துன்றியசெந் நெலினடிசில் கன்னனறுங் கனிக
டுயவறு சுவைக்கறிநெய் தயிர்திரண்ட பாறே
னன்றுதிருப் பண்ணியந்தண் ணீரமுத மடைக்காய்
நரபதியே வலினமைச்சர் நாடோறுநடத்த. 82

(இ-ள்): அன்று முதனாடோறு நாடோறும்-அன்று முதலாக நாள் தோறும் நாள்தோறும்; அண்ணலடியரளவிறந்த பெயர் வந்தவர் களெல்லாம்-புராணங் கேட்கவந்த அளவிறந்த சிவனடியார்களெல் லாம்; சென்றுறையத் திருமடங்கள்-ஆங்காங்குச் சென்று வசித்தற்குத் திருமடங்களும்; மடங்கடொறுந் திருவிளக்கு-அம்மடங்கள்தோறும் விளக்குகளும்; அவர் சாத்தவுள்ளுடை மேற்போர்வை-அவர்கள் தரித்துக்கொள்ள உள்ளுடைகளும் போர்த்துக்கொள்ள போர்வை களும்; துன்றிய செந்நெலினடிசில்-பொருந்திய சம்பாநெல்லரிசியா லாகிய திருவமுதும்; கன்னனறுங்கனிகடுயவறு சுவைக்கறி-கற்கண்டு இனிய பழவருக்கம் தூய்மையாகிய அறுசுவையோடு கூடிய கறியமு தும்; நெய் தயிர் திரண்டபாறேன்-நறுநெய் கட்டித் தயிர் திரட்டுப் பால் தேன்; நன்று திருப்பண்ணியந் தண்ணீரமுதமடைக்காய்-நல்ல பணியார வருக்கங்களும் தண்ணீரமுதும் பாக்கு வெற்றிலை முதலிய முகவாசங்களும் ஆகிய இவைகளை யெல்லாம்; நரபதியேவலின்-அநபாயசோழன் உத்தரவினால்; அமைச்சர் நாடோறு நடத்த-மந்திரிகள் நாடோறும் நடத்திக்கொண்டுவர. (எ-று). அங்கு-அசை.

(தொடரும்)

சமயபோதனை

பாடம் 8 விஞக்கள் நவம்பர் 1974

விஞக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 30-11-1974க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.


மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. தூயநிலையில் திருவருட்பா விளங்கச் செய்ய, என்ன செய்ய வேண்டும்?
2. திருவரங்கத்தில், சேவை செய்ய இராமாநுசரும் வடுகநம்பியும் சென்றபோது நடந்த உரையாடலை விளக்குக.
3. கல்வெட்டுச் செய்திகளை வரலாற்றுக்கு அடிப்படையாகக் கொண்டு சேக்கிழார் பெருமான் பெரியபுராணம் எழுதினர் என்பதை நிறுவுக.
4. சம்பந்தரின் பதிகங்களில் 8, 9, 10 ஆகிய பாடல்களில் அருளிச் செய்துள்ள செய்திகள் என்னென்ன?
5. தெய்வயானை அம்மையின் சிறப்பியல்புகள் என்னென்ன?
6. எந்தக் கடினமான வேலையை இந்திய நாடு மிக எளிதாகச் செய்து முடித்து வெற்றி கண்டுள்ளது?
7. திருவரங்கத் திருமடத்தில் வாழ்ந்த போலித் துறவிகள் நல்லவர் களாகத் திருந்த இராமாநுசர் என்ன செய்தார்?
8. "இரு நியாயங்கள்" என்னென்ன? அவற்றிற்குத் தெய்வயானை, வள்ளியம்மையாரின் திருமணங்கள் எவ்வாறு பொருந்தும்?
9. "தத்துவம் தவறு" என்று மெய்ப்பித்த தண்ணீரின் செயலை ஆராய்க.
10. மதுரையில் நடந்த அனல்வாத நிகழ்ச்சியை விளக்குக.

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்:—

"அருளோசை"

தமிழ்நாடு தெய்விகப் பேரவை,
9, மகாராஜா சூரியராவ் சாலை,
ஆள்வார்பேட்டை,
சென்னை-600018.



உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

—திருஞானசம்பந்தர்.

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பா

கரும்பில் இன்சாற்றைக் கனிந்தமுக் கனியைக்
கருதுகோற் றேன் நறுஞ் சுவையை
அரும்பெறல் அமுதை அறிவைஎன் அன்பை
ஆவியை ஆவியுட் கலந்த
பெருந்தனிப் பதியைப் பெருஞ்சுகக் களிப்பைப்
பேசுதற் கரும்பெரும் பேற்றை
விரும்பிஎன் உளத்தை இடங்கொண்டு விளங்கும்
விளக்கினைக் கண்டுகொண்டேனே!

—திருவருட்பிரகாச வள்ளலார்

திருச்சிற்றம்பலம்

Edited, Printed at Peravai Achakam and Published by A. Narayanaswamy, B. A.,
for the Tamil Nadu Deivika Peravai at No. 9, Maharaja Surya Rao Road,
Alwarpet, Madras-600018.